உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ௵ பங்குனிமீ [பகுதி-௫.

## பொய்யாமை.

இந்நாவலந் தீவிலுள்ள நம்பெரியோரெல்லாம் உலகிற் பெரும்பாவங்கள் ஐந்தாம் எனவும், அவை பொய் கொலை களவு கள் காமம் என்பனவாம் எனவும் உரைப்பர். "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" என்றார் மணிமேகலையினும். இதன்கண் செய்யுணோக்கிக் 'கள்ளும் பொய்யும்' என எண்ணினாரேனும், பொய்முதலாக எண்ணுதலே வழக்காம் என்க. இவற்றுட் பொய்யொன்றே மற்றைக் கொலை முதலிய நான்கிலும் வியாபிக்கும் வலியுடையதாதலின், இதனையே தலையாய பாவம் என்பர். அது பொய்யுணர்வு, பொய்யுரை, பொய்யொழுக்கம் என மூன்றாகவைத்துக் கடியப்படும். இவ்வாறு பெரும்பாவங்கள் என்னும் வரிசையிற் பொய்முதலிய ஐந்தனையும்வைத்து, அவை எல்லாவற்றுள்ளும் பொய்யைத் தலைமையான பாவமாகக்கொண்டு அதனைத்திரிகரணத்தாலும் பற்றாமற் கடிந்தொழுகுவது நமக்குச் சிறந்த அறமாம். பிறநாட்டார், இப்பெரும்பாவங்களுட் பலவற்றைச் சிறுகுற்றமாகவுங் கருதார். பிறநாடுகள் பலவற்றிற் கொலையுங் கள்ளும் பாவவுணர்ச்சியில்லாமலே பயிலப்படும். இனிப்பொய்யை நம்மவர் தலைமையான பாவமாகக் கருதியதற்குக் காரணம் என்னவெனிற் கூறுவேன்;—பொய்யுணர்வு காரணமாகவே கொலை முதலிய பாவங்களெல்லாம் பிறக்கும். மெய்யுணர்ந்தவழி அப்பாவங்கள் பிறவாவாம். கொலைமுதலியன மனப்பரிசுத்தம் இல்லாதாராற் புரியப்படும். மனப்பரிசுத்தம் சத்தியத்துடனிகழுமென்பர். "அகந் தூய்மை, வாய்மையாற் காணப் படும்" என்பது திருக்குறள். கொலை

கள் களவு காமம் நான்கும், மனவுணர்ச்சி நன்கமையாத மூடர்களாலும் விலங்குகளாலும் "இது கொலை, இது கள்ளுண்டல், இது களவு, இது காமம்" என்னும் பாவவுணர்ச்சியின்றி இயல்பாகவே செய்யப்படும். பொய்யோ விலங்குகளால் ஆகாமல், மானுடப்பிறவியினரால், தந்நெஞ்சால் நன்கு அறியப்பட்டு, இது பொய் என்னும் உணர்ச்சியோடே நிகழ்த்தப்படும். கொலை முதலிய நான்கும் பிறபொருள்கள் உண்டாயவழி உண்டாம்; பொய் பிறபொருளை வேண்டாமல் ஒருவன்தன்னானே எளிதிலாக்கப்படும். ஒரு பொய்யைக்கூறிக் கொலை முதலியவற்றை இயற்றுவித்தல் கூடும்; கொலை முதலியன பெரும்பாலும் பிறவுடலையும் பொருளையும் அழிக்கும். பொய் பிறருணர்வைக்கெடுத்து, அவரைக் கொலைமுதலிய பாதகங்கட்கு உள்ளாக்குவதற்கும் வாயிலாக நிகழும். கொலை முதலிய நான்கும் ஒருவன் காயத்தின் வலியளவே செய்யப்படும். பொய் அவ்வாறளவுபடாமற் பரக்கும். கொலைமுதலியன இப்பொய்யின்கண்ணே மறைந்துகொள்ளும்; பொய் இருண்டபெருங்காடுபோல்வது. கொலை முதலியன அக்காட்டுத்திரிந்து இடரிழைக்கும் கொடிய விலங்குகள்போலும். கொலைமுதலிய வினைகள், அவ்வவ்வினையுண்ட பொருள்கண்மட்டில் நிற்கும்; பொய்யை ஒருவன் கூறியொழிந்தால் அது பெருவிரைவிற் பரந்தோடி உலகை மூடிக்கொள்ளும். நரகம் என்னும் கொடிய அரக்கனது வலியகையிலுள்ள ஐந்துவிரல்களாகும், இவ்வைந்து பாவங்களும். பொய்என்பது அவ்வைந்துவிரல்களுள்ளும் அங்குஷ்டமாகும். கொலை முதலிய நான்கும் மற்றை விரல்களாம். எங்ஙனம் நான்குவிரல்களும் அங்குஷ்டத்தைத்தொட்டுக்கொண்டே ஒருவினை புரியப்படுமோ, அங்ஙனமே, கொலைமுதலியன நான்கும் பொய்யைத்தொட்டுக்கொண்டே இயற்றப்படும். (அவ்வரக்கன் இவ்வைந்து பாவங்களாம் ஐந்துவிரல்களாலும் தீய உயிர்த்தொகைகளைப் பற்றித் தன்எரிவயிற்றிட்டு வருத்துகிறான்) இவற்றாற் பொய்ப்பாவத்தின் தலைமையுணர்ந்துகொள்க. எல்லாத்தீயொழுக்கங்களும் பொய்யறிவடியாகவே பிறப்பன என்னுங் கருத்துப்பற்றியே, ஞானபூரணரான ஸ்ரீசடகோபர், "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாமுறாமை உயிரளிப்பான்" என மூற்படப்பணித்தருளினர். 'மெய்யுணர்ந்தான் விடு

பெறும்' என்பதனால், மெய்யுணர்வு வீட்டிற்கு ஏது ஆகவும், பொய்யுணர்வு அதற்கு விரோதியாகவும் அறியப்படுதலின், பொய்ப்பாவத் தலைமை எளிதிலுணரப்படும்.

இனித், திருவள்ளுவர் "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று" என்பதனால், தன்னோடு இணையொப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை யென்றும், பொய்யாமை அதன் பின்னேநிற்க நல்லது என்றும் உரைத்தமையின், கொலையினையே தலையாய பாவம் என்றலும், பொய்மை அதன் பின்னேவைத்துப் பாவம் என்றலும் அவர்க்குக் கருத்தாமெனத் துணியலாகும். அவர், பொய்யென்பது சிறிதுந் தீமைபயவாமல் நன்மையே பயக்கும்வழி மெய்போலவுங் கொள்ளப்படுதலால் திரியும் இயல்புடையதென்றும், கொலை அங்ஙனம் ஆகாது வேள்விமுதலாக யாண்டுச்செய்யப்படினும் ஒன்றனுயிர் நீத்தலாகிய இன்னாமையையே பயந்துவிடுதலால் திரியா இயல்புடையதென்றுங் கருதிப், பொய்க்கு முன்னே கொலையினை வைத்தனராவர். வேள்வியிற் செய்யப்படும் கொலைக்கும் பிராயச்சித்தம் இயற்றப்படுதலின் அது பாவமாதல் கண்டுகொள்க. அன்றியும், பொய் பாவமென்று கருதப்படுவது அதனால் விளையும் பலதீங்குகள்பற்றியேயாம். அத்தீங்குகளிலெல்லாம் 'சாதலின் இன்னாத தில்லை' என்பதனாற் கொலையே தலையாய தீங்கு என்னலாகும். இத்தலையாய தீங்குபுரியாமல் ஒழுகுதலே தலையாய அறம் எனக்கொண்டாரெனினும் ஆம். அங்ஙனம் கொண்டாரேனும், அவர், "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதனாற் பொய்யாமையையே இடைவிடாமற் செய்க எனவும், அங்ஙனம் செய்தாற் பிறவறமொன்றும் செய்யாமை ஒருதலையாக நன்றாம் எனவும் கூறியவாற்றாற், கொல்லாமை முதலாகிய எல்லாவறத்தின் பயனையும் இப்பொய்யாமையொன்றே தரவல்லதென்று அவர் கருதியுள்ளாரென்று தேறலாகும். பொய்யாமை எல்லாவறத்தின் பயனையும் தரவல்லதென்று கருதினார்க்கு, பொய் எல்லாப்பாவத்தின் பயனையும் தரவல்லதென்பதும் கருத்தாமென்பது எளிதினுய்த்துணரப்படும். இதனால் அவரும் பொய்யே எல்லாத்தீங்குகட்குங் காரணமாமெனக் கருதினாராதல் காண்க.

இஃதன்றி, 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என்பதனால், 'யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையாலும் வாய்மையின் மிக்கன வாகச் சொல்லப்பட்ட பி றஅறங்களில்லை' என்று இப்பொய்யா மையின் சிறப்புணர்த்தற்குத், தாமே முன்வந்து கரிகூறிநின்றதுங் காண்க. திருவள்ளுவர், பொய்புணர்வு பொய்யுரை பொய்யொழுக் கம் இலராகிப் பொய்யாமையினைத் திரிகரணத்தானும் பேரறமாகக் கொண்டொழுகிய சிறப்பால் 'போய்யில் புலவர்' எனப் பெயர்சிறந் தாராதலால் அவர் பொய்யாமைக்குக் கரிகூறிநின்றாராவர். இவற் றாற் பொய்யாமையின் மிக்கனவாகப் பிறவறங்களில்லையென்பதும் எல்லாப் பாவங்களையும் அப்பொய்யொன்றே தரவல்லதென்பதும் அவர்க்கும் உடன்பாடாதலுணர்க. சீத்தலைச்சாத்தனார் 'கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையுந், தள்ளா தாகுங் காமந் தம்பா, லாங் கது கடிந்தோ ரல்லவை கடிந்தோர்' (சிறைசெய்காதை)என்பதனால், இடம்பற்றிக் காமத்தையே தலையாய பாவமாகவைத்து, அதனைக்கடி ந்தோரே மற்றை நான்கையுங் கடிந்தவராவர் எனவுரைத்தார். இக் கருத்தேகொண்டு 'காமமே கொலைகட் கெல்லாங் காரணம்' எனக் கூறினாருமுளர். இவ்வாறு ஓரோர் பாபபுண்ணியத்தை எடுத்துக் கூறுமிடத்து, முறையே விடுதற்கும் பற்றுதற்கும் ஏற்றபெற்றியால் மிக இழித்தும் மிகவுயர்த்துங்கூறுவது நூல்வழக்கேயாம். இங்ஙனம் காமம், கொலைமுதலியவற்றிற்குப் பாதகத்தலைமைகூறும் ஆசிரியர்க் கெல்லாம் இத்தீங்குகள் மயக்கவுணர்வடியாகப் பிறப்பன என்பதும், அம்மயக்கவுணர்வு பொய்யுணர்வேயென்பதும் உடன்பாடாம். ஆத லாற் கொலைமுதலிய தீங்குகளெல்லாம் பொய்யுணர்வைத் தள்ளா என்பது தெளிந்துகொள்க. இவையெல்லாம் நன்றாய்ந்த பெரியார் 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும்' எனப்பணித்த மையினையும் நோக்குக.

பொய்யுணர்வாவது, வஞ்சவுணர்ச்சி. இதனை விபர்யயம் என் பர். அது கடவுளும் இருவினைப்பயனுமுதலாகப் பெரியோர் கண் டு உண்டென்றவற்றை இலவென்றுகொண்டு, நூலானும் உலகத்தோ ரானும் கடியப்பட்டனவற்றைப்புரிதற்கும், புரிந்தும் நல்லோனாகத்

தோற்றுதற்கும், ஏற்றவஞ்சவுரை வஞ்சவொழுக்கங்களைத் தன்னுள்ளே தேர்தல். இது பல்வகைத் தீங்குகளுக்கும் மூலமாதலின் மாபாவமாதல் கண்டுகொள்க. வஞ்சவுரை, வஞ்சவொழுக்கங்களை நிகழ்த்தற்குச் சமயம் வாயாவிடினும் ஒருவன் தேர்ந்த வஞ்சவுணர்ச்சிமட்டில் அவனைப் பெரும்பாவி யாக்கிவிடுமென்றுணர்க.

பொய்யுரையாவது 'அஃதன்று' எனத் தன் நெஞ்சு அறிந்திருப்பவும் பிறனுக்கு அது தோன்றாதவாறு மறைத்துச் சொல்லும் வஞ்சவுரை.—இதனை,

"அற்றன் றாத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனோர்த்தன்
மற்றித் தன்மை படுமோயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்."

(நீலகேசித்தெருட்டுரை மேற்கோள்.)

எனவருதலால் உணர்க. "ஒருவன் சொல்லல்வேண்டும், அவன்சொல்லியவாறு அன்றாதல் வேண்டும், அங்ஙனம் அன்றாதலை அவன் உணர்ந்தவனாதல் வேண்டும், அச்சொல்லைப் பிறன் கேட்டல் வேண்டும்—இந்நான்குங் கூடியவழியே பொய்யுரையாம்" என்பதுஇதனலறியப்படும். இப்பொய்யுரை சொற்குற்றப்நான்கனுட் டலையாயதெனப்படும்; இதனைப் "பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்" என மணிமேகலைக்கண் வருதலானுணர்க. குறளை, மெய்பற்றியதாயினும், அதனாற் பிறனுக்குவிளையுந் தீங்குபற்றியே பாவமெனவிலக்கப்பட்டது. தீமை பயப்பனவன்றி நன்மைபயவாதனவும் பாவமாம் என நம்பெரியோர் கருதியுள்ளாரென்பதற்கு, அவர், வாக்கினாலாகும் பாவங்களுட் பயனில் சொல்லையும் ஒன்றாக எண்ணியதே சான்றாம். இதனால், அவர் தீமை பயக்கும் பொய்யுரையை எத்துணைப்பாதகமாக வைத்துக் கடிந்தனரென்பது தேறப்படும். இப்பொய்யுரையாமையின் மிக்க பேரறம் வேறில்லையென்பதனையும், எல்லா நல்லறங்களும் இப்பொய்யுரையாமை யொன்றுண்டாக வுண்டாம் என்பதனையும் நன்குணர்த்தற்கன்றே, நந்தெய்வப்பழமறையும் 'தர்மஞ்சர' என்பதற்கு முற்படவைத்து 'ஸத்யம்வத' என முழங்குவதூஉமாயிற்று என்க. சத்திய

ங்கூறுதலும் பிற்கூறப்பட்ட தருமத்தினென்றாயிருப்பவும், அதனைத் தனியே பிரித்து முற்படவைத்து ஓதியதே அவ்வாய்மையின்றலைமை விளக்குமன்றே ?

இனி, நன்மையே பயவாது சிறிதுதீமை பயக்கும்வழியும் இப் பொய்யுரை பாவமாகுமெனவும், சிறிதுந் தீமைபயவாது நன்மையே பயக்கும்வழிப்புண்ணியமாகும் எனவும் கூறுதலுமுண்டு. பொய்க்கு மறுதலையாகிய வாய்மையும் சிறிதுதீமைபயக்கும்வழியும் பாவமாம் என்பர். "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமை யிலாத சொலல்" என்றார். இதனால் நம்பெரியார் கருத்தெல்லாம், எவ்வாற்றானும் உயிர்கட்குத் தீங்குபயவாமல் நன்மையேபயக்கவொழுகுதலையே நோக்கியன என்பது உணரத்தகும். இவற்றையெல்லாம் நோக்கின் தீமைபயப்பனவும் நன்மைபயவாதனவும் பாவமாமெனவும், தீமைபயவாதனவும் நன்மை பயப்பனவுமே புண்ணியமாமெனவும் நம்மவர் பகுத்துள்ளமை வெளியாம். "பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய்யுரைத்தலும் ஆம் என்பதுபற்றி, நன்மை வேண்டிக் கொலையும் ஆமோ எனின், நன்மையாவது ஜீவன்கட்குப் பீடைபுகுதாமல் வர்த்தித்தலாதலின், கொலை, ஜீவன்கட்குப் பீடா நிமித்தமாதலின் ஆகாதென்று கொள்க."

பொய்யொழுக்கமாவது வஞ்சவொழுக்கம். அது, நூல்களிற் கூறப்பட்ட நன்னெறிகளில் உள்ளத்தால்ஒழுகாதாகி, அவ்வந்நெறி கட்குரிய வேடங்களையும் ஆசாரங்களையும் உலகத்தை மோகித்தற் பொருட்டுப்புனைந்துநடித்தலாம். இது கூடாவொழுக்கினன் ஒருவன் மோனசந்நியாசிபோல ஒழுகுதல் முதலியனவாம். பொய், ஒழுக்கத் தினும் உண்டென்பதனைப் "பொய்யாற் றொழுக்கம்" 'பொய்தீ ரொழுக்கம்' 'பொய்யடிமை' எனவருவனவற்றானுணர்க. 'வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்' என்னுந் திருமந்திரமும் இப் பொய்யொழுக்கத்தினையே நிந்தித்ததாம். 'நெஞ்சிற் றுறவார் துறந் தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கண்ணா ரில்' எனவுரைத்த ருளிய தெய்வப்புலவர்கருத்தால் நோக்கின், இவ்வஞ்சவொழுக்கத் தின் பெரும்பாதகத்தலைமை நன்கறியலாகும்.

இவ்வாறு, உள்ளம் உரை செயல் என்னும் மூன்றானும் பொய்த்தலில்லாமையையே நம்மவர் பொய்யாமை என்பர். சைநபௌத்தரும், இப்பொய்யாமையினை, முறையே பஞ்சமஹாவிரதத்துளொன்றாகவும் பஞ்சசீலத்துளொன்றாகவும் வைத்து இனிது போற்றுவர் எனவறிக. இவ்வாறு திரிகரணத்தானும் பொய்யாம்பெரும்பாவம் எய்தாமலொழுகுதலே ஒருவனுயிர்க்குச் சிறந்த பேரறமாம் என்பதற்குப்பொருந்த, நம் பெருநூல்களுட் கேட்கப்படும் இதிகாசங்கள் மிகப்பலவாம். அரிச்சந்திரன் என்னும் அரசர்பெருந்தகை ஒரு பொய்கூறமாட்டாமல், தன்னரசிழந்து மனையிழந்து மகனிழந்து, தானும் புலையற்கடியனாய்ப் புக்குப் படாதனபட்டதும்; தசரதன் என்னும் சக்கரவர்த்தி ஒருபொய் கூறவறியாது, தன் அன்புடைத்திருமகனாரைக் காடுபோக்கித் தன்னாருயிர் துறந்ததும் நம்புண்ணிய சரிதங்களேயாம். நல்லோர்பாலன்றித், தன்னுயிரைப் போக்கவல்ல கொடியோர்பாலும் பொய்கூறலாகாதென்பதற்குத், தன்னைக் கொல்லப் புகுந்த கொடியபுலியிடத்தும் ஒருபொய்கூறவறியாதொழுகிய சுமதி கதை சேஷதர்மத்துப் பிரசித்தி பெற்றதன்றோ. அறங்களுக்கெல்லாம் பெருநிலயமாகச் சிறந்த தருமனும், தன்கருத்தால் மெய்யேயாயினும் வேறோர் பொருள்படுதலால் துரோணருக்குத் தீங்கிழைப்பதொன்றைச் சொல்லியதனானே பொய்யனெனக்கொள்ளப்பட்டு, அப்பாதகத்தின் பயனாகக் கொடுநரகங்கண்டு நடுங்கினான் என்பது, நாம் பொய்யாமைக்கு எடுத்துக்காட்டும் மெய்ச்சரிதையாகும். இனித்தந்நெஞ்சறிவது பொய்யாமைக்கு, நக்கீரனார் ஓர் பேரிலக்கியமாவர். இவர் 'கொங்குதேர்வாழ்க்கை' என்னுஞ்செய்யுட்குத் தந்நெஞ்சறிந்த குற்றத்தைக் கூறியதும், அச்செய்யுளை அருளிச்செய்த இறையனார் இவர்முற்போந்து தம் நெற்றிக்கண்ணைக் காட்டித் தாந்தெய்வமாதலை இவர்க்குணர்த்திய காலத்தும் அவ்விறையனாரை நோக்கி, நக்கீரர், 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனவுரைத்துத் தந்நெஞ்சறிந்ததைப் பொய்யாது நின்றதும் தமிழுலகம் நன்றறிந்தனவேயாம். வாய்மையினை முன்னிட்டுப் 'பொய்யில்புலவன்' 'பொய்யாமொழி' எனப் புலவர்க்கும், 'திருவாய்மொழி' 'பொய்யாமொழி' 'வாயுறைவாழ்த்து' என நூல்கட்குஞ் செய்யுட்கும் பெயர்வைத்தாளுதலும் நமக்குச் சிறந்ததாம். அறிவிலிக்கு மகிழ்

ச்சியே பயக்குமாயினும், அவன் செய்யாதனவற்றைக் கூறி அவனைப் பொய்யேபுகழ்தலை, நம்பெரியாரது செவ்வியநா ஒருபோதும் அறியா என்பர். இதனைச் ‘செய்யா கூறிப் புகழ்த, லெய்யா தாகுமெஞ் சிறுசெந் நாவே’ (புறம்) எனக் கல்விவீறுடையார் கூறுதலான் அறிக. ஒருவற்கில்லாதனவற்றைக் கூறிப் புகழ்தலினும், அவனை வைதலையே இவர் நன்றென்று கொள்வர்; ‘இல்ல புகழ்தலின் வைதலே நன்று’ என்பது மேற்கோள். சிலபுல்லறிவோர், ஒருகால் ஔவையாரை எதிர்ப்பட்டுத் தம்மைப்பாடும்படி வேண்டியபோது, அவர்பால் ஒருகுணமுங்காணாமையால் ‘நும்மை யான் எங்ஙனம் பாடுவேன்’ என்று அவர் மறுத்ததும் ஈண்டு நினைக்கத்தகும். இவ்வாறு பொய்யை விலக்கியும் பொய்யாமையைப் போற்றியும் நம்மவர் ஒழுகியதற்குப் பலபல மெய்க்கதைகள் எடுத்துக்காட்டலாகும். அவற்றையெல்லாம் இங்கு விரிப்பின் வரம்பின்றிப் பெருகுமென்க.

இனிப் பொய்யாமைக்கண் நம்மவர்க்குள்ள பெருமதிப்பை நன்கு தெளிதற்கு, எழுதாமறையினும் எழுதும் மறையினும் முறையே ஸத்யம், வாய்மை என்ற பெயர்களாற் பரம்பொருளை வழங்கியதே தக்ககருவியாகும். ‘ஸத்யம் ஞானமநந்தம்’ என்பதுவேதம். ‘தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது, வாஅய்மை வேண்ட வரும்’ என்பது திருக்குறள். இவ்விடங்களில் ஸத்யம், வாய்மை யென்பன பரம்பொருளையே குறித்தன. இவ்வரிய பெரிய வழக்கம் நமக்கேயுரியது. எழுதாமறைக்கண் ‘ஞானம்’ என்ற சிறந்த பெயர்க்கும் முன்னாக ‘ஸத்யம்’ என்றபெயரை வைத்தமையானே இதன்றலைமை ஆராயப்படும். இத்துணையும் கூறியவாற்றாற் பொய்யைப் பெரும்பாவங்களுட் டலையாகவைத்து, அதனைத் திரிகரணத்தானும் எய்தாமல் விலக்குவதூஉம், பொய்யாமையாகிய வாய்மையே எல்லா அறங்களுள்ளுந் தலையாயதெனக்கொண்டு அதனையே தெய்வத்தின் திருப்பெயராகவைத்துப் போற்றுவதூஉம் நமக்கே அடிப்பட்டு வந்த வழக்கென்பது நன்கு தேறப்படும். வேற்றுநாடுகளிற் சிறுகுற்றமாகவுங் கருதப்படாத புலாலுண்ணல், கள்ளுண்ணல் இவற்றை விலக்கியொழுகுதற்கண் இந்நாவலந் தீவு எங்ஙனம் எல்லாராலும் புகழப்பட்டதோ, அங்ஙனமே, பொய்யாமையைத் தலையாய அறமாகக்கருதி

யொழுகுதற்கண்ணும், இத்தீவமே தொன்றுதொட்டுப் புகழ்பெறுவதென்க. கிறிஸ்துபிறந்த உக-ஆம் ஆண்டில் (அஃதாவது இற்றைக்கு 1884 வருஷங்கட்குமுன்) இருந்தவரும், மேற்றேபத்துப் பழைய பூகோளசாஸ்திரிகளுட் பெருந்தலைமை வாய்ந்தவருமாகிய ஸ்ட்ரேபோ (Strabo) என்னும் யவனாசிரியர், தம்முடைய பூகோள நூற்கண் இந்தியரைப்பற்றிக் கூறுமிடத்து, * "அவர்கள் (இந்தியர்கள்) சத்தியத்தை அறத்தோடொப்பப்போற்றுகின்றார்கள்......பொய்க்கரி கூறினவனாகக் குற்றப்பட்டவன் தன் உறுப்பறையுண்பவனாவன்" என உரைத்தவாற்றானே நம்மவர் பொய்யாமையை எவ்வளவாக மதித்துப் போற்றினரென்பதும், பொய்யினை எவ்வளவாகக் கடிந்தனரென்பதும் நன்குதெளியலாகும். இந்நாவலந்தீவினர் சத்தியத்தினை அறத்தோடொப்பப் போற்றுதலே, மேற்றிசைத்தொல்லாசிரியர் ஓர் புதுமையாகக் கருதியதனையும் நோக்கிக்கொள்க. ஸ்ட்ரேபோ ஆசிரியர் இவ்வாறு நம்முன்னோரைப் புகழ்கின்றகாலத்துப் வேற்றுநாட்டார் பலர், அநாகரீக வடிவினராயிருந்தனரென்பது பலரும் அறிவர். நம்மவர் பெரும்பாவமாகக் கருதியன பலவற்றுள் ஒருசிலவற்றை, மேனாட்டார் சிறுகுற்றங்களாகக்கொண்டு அவற்றை விலக்கக்கருதி, இக்காலத்தேதான் சிறுகூட்டங்கள் கூட்டுகின்றனர். இதனால், அவரதுநவீனசாரமுயற்சியும், நமதுதொன்மைப்பட்ட ஆசாரமுதிர்ச்சியும் நன்கறியத்தகும். இங்ஙனமாகவும், பொய்யினை ஓர்பாவமாகவேகருதாமல் அதனைச்சொல்வன்மையினால் மெய்போலக்காட்டிக் கேட்டாரை மயக்குதலே தமக்குச் சிறந்த சாதுரியமாகக்கொண்டு இறுமாக்கும் வேற்றுநாட்டாரொருவர், மேலெடுத்துக்காட்டியவாறு, பல்லாற்றானும் நமக்கே சிறந்தபேறமாகிய பொய்யாமையினைப் புதிதாக உபதேசிப்பது, விழிகண் குருடாயிருப்பவுங் கண்ணுடையான்போல நடிப்பான் ஒருவன், இருகண்ணும் இயல்பாகவே நன்குடையான் ஒருவனுக்கு வழிகாட்டுதலோடொக்கும் என்று துணியலாகும்.

---

* "They respect alike Truth and Virtue.................. A person convicted of bearing false witness suffers a mutilation of his extremities." - (Strabo. Page 57. Ancient India by J. W. M. CRINDLE, M. A., L. L. D.,)

இதுகாறும் உரைத்துப் போந்தவாற்றாற், பொய்யாமையென்னும் பேரறத்தினியல்பும், அப்பேரறம் நமக்கே தொன்றுதொட்டுச் சிறந்ததாதலும், அதனை நம்மினுஞ் சிறப்பித்துப் போற்றுவார் வேறில்லையாதலும், அவ்வறம் நமக்குப்புதிதாக ஒருவராற் 'பேர்த்தும் பேசக்கிடந்த' தில்லையாதலும் உணர்ந்துகொள்க.

இங்ஙனம்,
ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

---

உ

# திருப்பதியைப்பற்றிய சிலஆசங்கை.

சென்ற மாசத்துச் செந்தமிழில் ஸ்ரீமாந். எம். நாராயணசாமி ஐயரவர்கள் "ஓர் தமிழ்ச்சாஸனம்" என்னும் மகுடத்தின் கீழ் எழுதிவிடுத்த விஷயத்தில், திருமலை (திருப்பதி)க்கோயில் வைஷ்ணவமே என்பதற்கு எடுத்துக்காட்டிய பல ஆதாரங்கள், வெகு நன்றாயும் ஒப்புக்கொள்ளத்தக்கனவாயுமிருக்கின்றனவென்பதற்குச் சிறிதும் ஐயமேயில்லை. அவற்றிலும் முக்கியமாகச் சிலப்பதிகாரமேற்கோள், அக்கோயில் வைஷ்ணவமாகவே இருத்தல் வேண்டுமென்பதை வெட்டெனை விளக்குகிறது. ஐயரவர்கள் "ஸ்ரீவைஷ்ணவரிரக்ஷை" என்றிருப்பதையும், "பன்மாஹேஸ்வரரிரக்ஷை" என்றில்லாதிருப்பதையும் எடுத்துக்காட்டியது, இவர்கக்ஷியை வற்புறுத்த வெகுபலமான சான்றாகும். இவைபோன்ற மற்றை ஏதுக்களும், இவர் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கேட்போர்மனம் திருப்தியடையச்செய்கின்றன என்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஆயினும், இவர் கூறியகூற்றுக்களில் ஆங்காங்குச்சிற்சில, ஆப்தவாக்கியப்பிராமாண்ணியத்தால் நிலைநிறுத்தப்பட்டிருத்தலின், அவைகளினுண்மையையும், இவையன்றி, இவர்திருப்திகரமாய்த் தெளியவைக்காத சிலவிஷயங்களையும் எடுத்து ஆராய்வோம். முதன்முதல் ஸ்ரீமாந். நாராயணசாமி ஐயரவர்கள், "பாளாஜி" என்னும்

பதம், வடநாட்டில் வேங்கடேசர்க்கு ஏன் உபயோகிக்கப்படுகிறது என்பதை விளக்காமல் மற்றைவிஷயங்களைத் தாக்கப்புகுந்தார். 'பிள்ளையார்' என்று பொருள்படும் இப்பதம் 'இளையபிள்ளையார்' 'இளங்குமரன்' என்னும் பொருள்படும் வடசொற்றிரிபு; விஷ்ணுவை எவ்வாற்றானும் குறிக்காதது. தொன்றுதொட்டுப் 'பாளாஜி' என்று கூவும் வடதேசத்தார் முதன்முதல் 'சுப்பிரமணியன்' என்னும் அர்த்தத்திலேயே கொண்டார்களென்பதற்கு ஐயமேயில்லை. இதுநிற்க.

ஐயரவர்கள், காளஹஸ்தியைப் பாடச்சென்ற நாயன்மார்கள் திருப்பதியைப்பாடவில்லையே, என்றுகூறின், தனிக்கார்த்திகேயன் கோயிலை இவர்கள் பாடுவது வழக்கமில்லை. நக்கீரரால் திருமுருகாற்றுப்படையிற் பாடப்பட்டிருக்கும் தலங்களில் பரங்குன்று தவிர்த்து மற்றொன்றும் பாடல் பெறவில்லை. திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், கதிர்காமம் முதலிய தனிச்சுப்பிரமணிய ஸ்தலங்களை மூவர்கள் பாடவில்லை. '[1]பரங்குன்றத்தைமாத்திரம் பாடியிருக்கும் பதிகத்திலும் சுப்பிரமணியக்கடவுளைப் பற்றி ஒருவார்த்தையுங் காணோம்: பரமசிவனைப்பற்றியே பாடியுள்ளது. இவ்வாறு தனிக் கோயிலைப்பாடுவது வழக்கமில்லையெனின், திருப்பதி சுப்பிரமணியன்கோயிலாயிருந்திருப்பின், நாயன்மார்கள் அதனைப் பாடாது விட்டதில் ஆச்சரியமுறத்தக்கதொன்றுமில்லை.

பேயாழ்வார் பாட்டுக்களிலிரண்டை மேற்கோளாக எடுத்துக் காட்டிப் 'பரமகாருகணிகரான' பெரியவாச்சான் பிள்ளைகளுடைய வியாக்கியானத்தை, அவைகளின் சரியான தாற்பரியத்தைத் தெரிவிப்பதென்று ஒப்புக்கொண்டுவிட்டார். இளங்குமரன் என்னும் தொடர் விஷ்ணுவென்னும் பொருளில் தமிழிலக்கியத் தெவ்விடத்தும் வழங்கப்படவில்லை. 'சுப்பிரமணியன்' என்னும் அர்த்தத்தைத்தவிர வேறோரர்த்தமும் அதற்கில்லை. 'குமரன்' என்னும் பதம்

(1) அன்றிக்கே; இக்கோயில்கள் தனித்திருப்பது நாயன்மார்கள் காலத்தில் வழக்கமில்லை: நக்கீரர்காலத்தில் சாதாரணமாயிருந்தது என்னலாம். அப்படியாயின் நக்கீரர்காலம் நாயன்மார்கள் காலத்திற்கு பிற்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

சுப்பிரமணியனுக்கே யுரித்தானது. அதிலும் ‘இளங்குமரன்’ ‘இளையபிள்ளையார்’ என்னும் விசேஷணஞ் சேர்த்த பதங்களுக்கு கார்த்திகேயனே பொருள் என்பதற்கு ஐயமேயில்லை. ஆழ்வார் கூறும் மாதிரியை உற்றுநோக்கின், அவர் சுப்பிரமணியன் கோயிலென்றே குறிக்கிறார் என்பது விளங்கும். வேங்கடத்தை ‘மேலை (மேனாள்) இளங்குமரர் கோமனுக்கிடம்’ என்று கூறியிருக்க, நித்தியயுவாவாயிருக்கும் ஸ்ரீய:பதியினிருப்பிடம் என்பதாக எவ்வாறு கொள்வது? ஆழ்வார் சொல்லுவதைக்கொண்டு, அஃது அவர்காலத்துக்கு முந்திச் சுப்பிரமணியன் கோயிலாகவும், அவர்காலத்திலே ஹரிஹரன்கோயிலாகவு மிருந்ததென் றுமாத்திரங் கொள்ளவிடமுள்ளதேயொழியப் பெரியவாச்சான்பிள்ளைகள் வியாக்கியானம் பொருந்தவேயில்லை (1).

இவையன்றிக்கே, வைஷ்ணவர்களாலியற்றப்பட்ட (2)நவீனமானவேங்கடேசமஹாத்மியத்திற் குறித்திருக்கும் வாமன புராணத்திலுங்கூடச் சுப்பிரமணியன் தாரகாசுரனைக்கொன்ற தோஷம் போகு நிமித்தம் வேங்கடேசனைக்குறித்துத் தவஞ்செய்தானென்று கூறியிருக்கிறது. இதற்கேற்ப ‘குறமகளிராடும்வேங்கட’ மென்று பேயார் வர்ணித்திருப்பதில் ‘குமரன்வேட்டவம்சத்தினர்க்கு இருப்பிடம்’ என்பது தொனிப்பதையும் காண்க. இஃதன்றிக்கே திருமலையிலுள்ள சுவாமிபுஷ்கரணியிலேயே, குமாரதீர்த்தம் என்பதும் உள்ளது என்பார்கள். ஆகவே சுப்பிரமணியன் பெயர் திருமலையுடன் ஏதோஒருவாறு சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்பது யார்க்கும் தோன்றுதிராது.

---

(1) ஆழ்வார்காலத்துக்கு முந்திச் சுப்பிரமணியன்கோயிலாகவும், அவர்காலத்தில் ஹரிஹரன் கோயிலாகவுமிருந்து, சிலப்பதிகாரத்தின் காலத்து, சுத்தவைஷ்ணவமாயிருந்திருப்பின், சிலப்பதிகாரம் ஆழ்வார்காலத்திற்குப்பிற்பட்டதென்னலாம் என்பது வெட்டென விளங்கும். ஆதலால் முதலாழ்வார்கள் காலம் நிர்ணயிக்கப்படின் இக்காவியத்தின் காலம் ஒருவாற்றுல் துணியப்படும். இவ்வழியாய்ச் சிலப்பதிகாரத்தின் காலத்தைக்கண்டுபிடிப்பின்,இது முதல்கஜபாஹுகாலத்ததா அன்றி இரண்டாவன்காலத்ததாவென்னும் சங்கை மாறுமென்பதற்கு ஐயமில்லை.

(2) இது மாத்திரமே யன்றி, எல்லா ஸ்தலபுராணங்களும் பிற்காலத்துண்டானவை யென்பதற்குச் சிறிதேனுந்தடையில்லை.

சிறிதேனும் இடமின்றியிருப்பின் சைவர்கள் தம்கோயிலென்றுஇராமாநுஜர்காலத்தே வாதித்திரார்கள். இவைகளை யெல்லாம் ஐயரவர்கள் ஒருவாற்றானும் மறுக்காது விடுத்ததற்கு யாது காரணமோ விளங்கவில்லை. இவைகளுக்கும் சமாதானஞ் சொல்லிவிடின், அவர்களுடைய சித்தாந்தம் முற்றமுழுதும் நிலைபெறுமென்பதையுத்தேசித்து, அவர்கள், தம் நுண்ணறிவைச்செலுத்துவாராக.

து. அ. கோபிநாதராவ்,

சென்னை.

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

## எதிர்கோட்படலம்.

கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்களெல்லாஞ்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் தணங்கைத் தந்த பாற்கட லெதிர்வ தேபோன்
மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்த தன்றே

என்னும் ரு-ம் செய்யுளில், 'மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்ததன்றே' என்பது 'மங்கையைப் பயந்தமன்னன் சேனைவந்தெதிர்ந்த தன்றே' எனக்காணப்படுகின்றது. ஏனைய கடல்களைப் பாற்கடல் எதிர்வதுபோலத், தசரதன்சேனையைச் சனகன்சேனை எதிர்ந்ததெனக் கூறுதலே சிறப்புடைத்தாதலின் 'மங்கையைப்பயந்தமன்னன் சேனைவந்தெதிர்ந்ததன்றே' என்பதேபொருத்தமுடைத்து. முன்னும், 'கந்தடு களிறுந் தேருங் கலினமாக் கடலுஞ்சூழ' (ச - ம் செய்யுள்) எனவும், பின்னும், 'மாறிலாமதுகையான் வருபெருந்தானைமே-லூறுபேருவகையானனிகம் வந்துற்றபோது' (கரு-ம் செய்யுள்) எனவும் அனிகத்தையே கூறுதல் காண்க.

ஷை

காதலோ வழிகிலேங் கரிகளைப் பொருவினர்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியங் குமரர்வந் தெய்தலுந்
தாதையா தொத்ததத் தானையின் றன்மையே.

என்னும் ௩.௦-ம் செய்யுளில், 'தாதையாதொத்ததத்தானையின்றன்மையே' என்பது 'தாதையோடொத்ததத்தானையின்றன்மையே' எனக்காணப்படுகின்றது. 'தாதையாதொத்தது' என்பதற்குப் பொருள் கொள்ளுமிடத்து இடர்ப்பட்டுக்கொள்ள வேண்டியிருத்தலினாலும், அங்ஙனங்கொள்ளுமிடத்துப்பொருள்சிறவாமையாலும் 'தாதையோடொத்தது' என்பதே பொருத்தமுடைத்து. குமரர்வந்தெய்தலும் தாதைக்கு எத்துணைக்காதலும் மகிழ்ச்சியுமிருந்தவோ, அத்துணைக்காதலும் மகிழ்ச்சியுமிருந்தன சேனைக்குமென்பதாம்.

## உலாவியற்படலம்.

களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை யளப்ப கள்ள
மொளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள்ளூற
வெளுப்பன கறுப்ப வான வேற்கணு ளொருத்தி யுள்ளங்
குளிர்ப்பொடு காண வந்தாள் வெதுப்பொடு கோயில் புக்காள்.

என்னும் கசுசு-ம் செய்யுளில் 'கள்ள—மொளிப்பன' என்பது 'கன்ன—மொளிப்பன' எனக்காணப்படுகின்றது. 'வெளிப்பட்டோடப்பார்ப்பன' எனப்பின்வருதலின் முன்ஒளித்திருந்ததென்பது பெறப்படுதலின் 'கன்ன மொளிப்பன' என்பதே பொருத்த முடைத்து. 'வெளிப்பட்டோடப் பார்ப்பன' என்பதற்கு, அப்புறப்பட்டு ஓட அல்லது உருவப்பார்ப்பன எனப்பொருள் கோடல் இத்துணைச்சிறப்பின்று. கன்னம் என்பது ஈண்டுப் புருவக்கடையை.

ஷை

அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை யேனுமொ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

என்னும் ௩௨ - ம் செய்யுளில், 'இருப்புநெஞ்சினை யேனுமொரேழைக்காப்- பொருப்புவில்லைப்பொடிசெய்தபுண்ணியா — கருப்புவில்லிறுத்தாட்கொண்டு காவென்றாள்' என்பது 'இருப்புநெஞ்சினராயுமொரேழைக்காப் - பொரு

ப்புவில்லைப் பொடிசெய்த புண்ணியர் - கருப்புவில்லிறக் கற்றிலரோவென்ருள்' எனக்காணப்படுகின்றது. முன்னும் பின்னும் இராமபிரானைப்ப டர்க்கையாகவே வைத்துக்கூறுதலானும், அத்துணைப்பெருமையும் வன்மையும் படைத்தபொருப்புவில்லை முரித்தவர் இத்துணைச்சிறுமையும் மென்மையும் படைத்த கருப்புவில்லை முரிக்கப்படித்திலரோ என்னும் ஓர் அலங்காரப்பொருடருதலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. இருப்பு நெஞ்சையுடையராயிருந்தும் ஒருபெண்ணுக்காக (இரக்கமுற்று) பொருப்புவில்லைப் பொடிசெய்த புண்ணியர் (என்னையெய்துதொலைக்கு மாறனுடைய) கருப்பு வில்லை இறுவிக்கப் படித்திலரோ என்ருள்என்பதுபொருள். இறஎன்பதில் விவ்விகுதி தொக்குநின்றது. இருப்பு நெஞ்சினராயும் என்றது தன்னையன்பு செய்யாமை பற்றி.

ஷ

தொய்யில் வெய்ய முலைத்துடி போலிடை
நையு நொய்ய மருங்குலொர் நங்கைதான்
கையு மெய்யு மறிந்திலள் கண்டவ
ருய்யு முய்யு மெனத்தளர்ந் தோய்வுற்ருள்.

என்னும் நகூ - ம் செய்யுளில், 'நையுநொய்யமருங்குலொர்நங்கைதான்' என்பது 'நையநொய்தின்வருந்தியொர்நங்கைதான்' எனக்காணப்படுகின்றது. 'துடிபோலிடை'எனமுன்வந்தமையின் பின்னும் இடையைக் கூறுதல் வழுவாய்முடியுமாதலின் 'நையநொய்தின் வருந்தி' என்பதே பொருத்தமுடைத்து.

## கோலங்காண்படலம்.

பரந்தமே கலையுங் கோத்த பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு சிலம்பி யார்ப்பப்
புரந்தரன் கோற்கீ ழானே ரரம்பையர் புடைசூழ்ந் தென்ன
வரம்பறு சும்மைத் தீஞ்சொன் மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

என்னும் உக-ம் செய்யுளில் 'புரந்தரன் கோற்கீ ழானே ரரம்பையர்புடைசூழ்ந்தென்ன' என்பது 'புரந்தரன்றனக்குற்ருளை யரம்பையர் புடைசூழ்ந்தென்ன' எனக்காணப்படுகின்றது. 'புரந்தரன் கோற்கீழானே ரரம்பையர்' என்பதிற் சிறிதும் பொருட்சிறப்பின்மையின் 'புரந்தரன்றனக்குற்ருளை' என்பதே பொருத்தமுடைத்து. புரந்தரன்றனக்குற்ருள்— இந்திராணி. இந்திராணியை அரம்பையர் புடைசூழ்ந்தாற் போலச் சீதாபிராட்டியை மடந்தையர் புடைசூழ்ந்தார் என்பது கருத்து. இன்னும் 'வரம்புறுசும்மைத்தீஞ்சொன்மடந்தையர்' என்பது 'வரம்பறுமழலைத்தீஞ்சொன்

மடந்தையர்' எனக்காணப்படுகின்றது. (சும்மை) என்பதிலும் 'மழலை' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க. வரம்பறு மடந்தையர் என ஒட்டுக.

௯௪

துன்றுபுரி கோதையெழில் கண்டுலகு சூழ்வந்
தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பா
னென்றுமுல கேழுமர செய்தியுள னேனு
மின்றுதிரு வெய்தியது வென்னவய மென்றான்.

என்னும் ௬௩-ம் செய்யுளில், 'இன்றுதிரு வெய்தியது வென்னவய மென்றான்' என்பது 'இன்றுதிருவெய்தியதெமக்கெனநினைத்தான்' எனக்காணப்படுகின்றது. 'என்னவயமென்றான்' என்பதிற் பொருள்சிறவாமையின் 'எமக்கெனநினைத்தான்' என்பதே பொருத்தமுடைத்து. பின்னையதில் இசைச்சிறப்புண்மையுங் காண்க.

௯௫

அச்சென நினைத்தமுத லந்தண னிருந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றா
லிச்சிலை கிடக்கமலை யேழையு மிறானே.

என்னும் ௬௪-ம் செய்யுளில், 'அச்செனநினைத்தமுதலந்தணனிருந்தான்—பச்சைமலையொத்தபடிவத்தடலிராமன்—நச்சுடைவடிக்கண்மலர்நங்கையிவளென்றால்' என்பது 'அச்சிலையுணர்ந்தமுதலந்தணனினைத்தான்-பச்சிலையையொத்தபடிவத்தடலிராம-னச்சிலையயிற்கண்மலர்நங்கையிவளென்றால்' எனக்காணப்படுகின்றது. வசிட்டனை, முன்னரேயே பிராட்டியைக் கண்டு வியந்ததாகக் கூறியிருத்தலின், இச்செய்யுட்கருத்தை விசுவாமித்திரன் கூறியதாகக்கோடலே சிறப்புடைத்தாதலின், அதற்கியைய 'அச்சிலையுணர்ந்தமுதலந்தணனினைத்தான்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. அச்சிலையுணர்ந்தமுதலந்தணனென்றது விசுவாமித்திரனை. அச்சிலையைப்பற்றி முன்னறிந்திருந்த முனிவனென்பது பொருள். இப்பொருட்கு முதலென்பதை உணர்ந்தவென்பதனுடனியைக்க. இச்செய்யுட்குப் பொருளுரைக்குமிடத்து இராமன் மலர்மங்கை என்றறிந்தால் இறானோ (என) விசுவாமித்திரன் நினைத்தான் எனக்கூட்டி யுரைக்க. இஃதன்றி இன்னும் இச்செய்யுள் ௬௩-ம் செய்யுளின்பின்னே காணப்படுகின்றது. இதன் முதற்செய்யுளில் 'தாதையருகிட்டதவிசிற்றனியிருந்தாள்' என்பது இதனுடனியையாமை

யானும், இதன் பிற்செய்யுளுடனியைதலானும், இதுவும் முன்னும் இயையாமையானும் அதன்பின் வருதலே பொருத்தமுடைத்து.

கடிமணப்படலம்.

கனையேழ் கடல்போற் கருநா ழிகைதான்
வினையேன் வினையால் விடியா விடனீ
தனியே பறவாய் தகவே துமிலாய்
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ.

என்னும் ரு-ம் செய்யுளில் 'கனையேழ்கடல்போற்கருநாழிகைதான்' என்பது 'நனியேழ்கடல்போல்வருநாழிகைதான்' எனக் காணப்படுகின்றது. எழ்கடல்போன்ற இராக்காலம் என்னுமிடத்துக் கருதிய பொருள் இனிது புலப்படாமையால் 'நனியேழ்கடல்போல்வருநாழிகை' என்பதே பொருத்தமுடைத்தென்க. எழ்கடல்போல் (ஒன்றன்பின்னொன்றாக) மிகவருகின்ற நாழிகை என்பது பொருள். நனிவரு என்க. விரகிகளுக்கு ஓர் நாழிகை ஒரூழிபோலிருத்தலி னிங்ஙனங் கூறினர்.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

---

உ

# தமிழிலக்கவரலாறு.

ஸ்ரீகுரோதிஸு ஐப்பசிமாசத்துச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே ஸ்ரீமத்: து. அ. கோபிநாதராவ் M. A. அவர்கள் "தமிழிலக்கவரலாறு" என வொருவிஷயம் வெளியிட்டார்கள். அதிலே சோபகிருதுஸு மாசிமாசத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் தமிழிலக்கத்தைக்குறித்தெழுதப்பட்ட விஷயம் முழுதும் ஆதாரமில்லாக்கூற்றென்றும், சாசனவாராய்ச்சியாற் றமக்குள்ள துணிவைக்கொண்டு தமிழிலக்கங்களின் சரித்திரத்தைச்சுருங்கக்கூறுதும் என்றும் ராயரவர்கள் நுதலிப்புகுந்தார்கள். அங்ஙனம் புகுந்தவர்கள் தமிழிலக்கங்களின் சரித்திரத்தை ஒருசிறிதுங்கூறாது, தாங்கண்ட இந்திய சாசனங்களுள்ளே அசோகன்சிலாலிகிதமே பழைய தெனவும்,

அதற்குப்பிற்பட்டது கற்கோயிற்சிலாலிகித மெனவும், அதற்குப் பிற்பட்டது திருநாதர்குன்றுச் சிலாலிகித மெனவும், அதற்குப் பிற்பட்டது பல்லவசாசன மெனவும், அதற்குப்பிற்பட்டது சோழர்காலமென்றும், அதற்குப் பிற்பட்டது பாண்டியர்கால மென்றும் அது, கி. பி. 13-ம் நூற்றூண்டென்றும், அதற்குப் பிற்பட்டது வித்தியாநகர ராஜாக்கள் காலமென்றும், "இவ்வெவ்வேறுகாலங்கள் தோறும் இலக்கங்கள் எவ்வாறு மாறிவந்தனவென்பதை முறை முறையே அடுத்தபக்கத்திற் காட்டிய படத்தால் தெள்ளிதாயறியலாம்" என்றுங்கூறி அப்படத்தையுந்தந்து முடித்தார்கள்.

இதுவே ராயரவர்கள் தமிழிலக்கங்களின் சரித்திரத்தைச்சுருங் கக்கூறியவாறும்.

இவ்வளவோடமையாது "இந்தியாவில் வழங்கும் எல்லா அக்ஷரங்களும் அசோக ராஜாவின் காலத்து வழங்கிய அக்ஷரங்களின் திரிபு" எனவும் வரைந்துவிட்டார்கள்.

தமிழிலக்கவரலாறு என்ற விஷய நாமத்தைக் கண்டதும் அதன்வரலாறெல்லாம் சாங்கோபாங்கமாக வரப்போகின்றதெனக் கழிபேருவகைபூத்த யாம் அவ்விஷயத்துட் புகுந்தபோது இலவு காத்த கிள்ளையாயினேம்.

சிலாசாசனமின்றிக் கூறப்படுவதெல்லாம் ஆதாரமில்லாக்கூற்றென்பது ராயரவர்கள் மதமாயின் யாம் மேற்கூறக்கிடப்பது யாது மில்லை. அசோகன் காலத்து இலக்கங்களும் அக்ஷரங்களும் அவனுக்கு முன்னரில்லாது அவன் காலத்திலேயே ஆக்கிக்கொள்ளப்பட்டனவென்பதற்குச் சிலாசாசனமுளதோ? அசோகன் காலத்திற்கு முன்னர் வழங்கிய இலக்கங்களும் அக்ஷரங்களுமே அவன் காலத்தில் வழங்கப்பட்டனவாகாவோ? அவன் காலத்தில் தமிழிலக்கங்களும் அக்ஷரங்களும் இல்லாதன வென்பதற்கு ராயரவர்கள் காட்டுஞ் சிலாசாசனம் யாது? ராயரவர்கள் மதப்படி முதன் முதல் அசோகனே சிலாசாசனம் செய்வித்தானுக. அவன் தனக்கு முன்னரில்லாத இலக்கங்களையும் அக்ஷரங்களையுந் தானே சிருஷ்டித்தான் என்பது எதனுற்றுணியப்பட்டது? அசோகன் கலிங்கதேசத்தை

வெற்றிகொண்ட காலத்தில் அங்குச்சென்று வழங்கிய தமிழிலக்கங்களைக் கவர்ந்தானென்னல் சாலாதோ?

இதுகாறுங் கண்ட இந்திய சிலாசாசனங்களுள்ளே பழையது அசோகன் சிலாசாசன மென்பது ராயரவர்கள் கூற்று. அசோகன் இற்றைக்கு இரண்டாயிரத்து நூற்றிருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே விளங்கிய அரசன் என்பது யாவருமறிவர். இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முற்பட்ட அஃதாவது அசோகனுக்கு இருநூறுவருஷங்களுக்கு முற்பட்ட சிலாசாசனமொன்று நேபாளத்தருகேஅகப்பட்டதும்அதன் 'போட்டோகிராவ்' படத்தைக்கொண்டியற்றிய பிரதிலிபி யொன்று 'Encyclopædia Britanica' புதியபதிப்பில் வெளியிடப் பட்டிருப்பதும் ராயரவர்கள் அறிந்திலர்போலும். இதனால் ராயரவர்கள் அசோகன் காலத்துச் சிலாசாசனமே பழையதென மேற்கொண்டது பொருந்தாமை காண்க.

பல்லவராஜாக்கள் காலத்துக்குப் பிற்பட்டது சோழர்காலமென்பதும் அதற்குப்பிற்பட்டது பாண்டியர் காலமென்பதும் ராயரவர்கள் கொள்கை. இவ்விஷயத்தில் ராயரவர்கள் தாங்கற்ற இந்துதேச சரித்திரத்தை அடியோடுமறந்தாராவர். அசோகன்காலத்துக்கு முற்றொட்டு வருகின்ற சேரசோழபாண்டியர் காலத்தை நோக்காது சேரசோழபாண்டியராச்சியங்களுண்டாய பின்னர்ப் பன்னெடுங்காலஞ்சென்றுண்டாய பல்லவராச்சியத்தைச் சோழராசாக்களுக்கு முற்பட்டதென்பதும் சோழருக்குப்பிற்பட்டபாண்டியர்காலமென்பதும் பிரபௌத்திரன் பிரபிதாமகன் கல்யாணத்திற் றும்பூலம்வழங்கின கதையின் வேறாகாவன்றோ!

தமிழ் நூல்களுள்ளே தொல்காப்பியம் முதற்சங்கத் திறுதிக் காலத்ததன்றோ. இடைச்சங்கத்திற்கும் கடைச்சங்கத்திற்கும் நூலாயிருந்ததும் அதுவே யன்றோ. எப்படிக் குறைக்கினும் தொல்காப்பியந் தோன்றிய காலம் ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்படுமேயன்றி உட்படாது. அதிலே தமிழ் எழுத்திற்கு வரி வடிவு கூறப்பட்டுக் கிடத்தல் யாவருமறிவர். அது ராயரவர்கள் மேற்கொள்ளும் சிலாலிகிதத்தினுஞ் சிறந்த வச்சிர லிகிதமன்றோ. அங்ஙனமாகவும்

தமிழெழுத்துக்கள் இற்றைக்கிரண்டாயிரத்து நூற்றிருபத்தைந்து வருஷங்களுக்கு முற்பட்ட அசோகன் காலத்து அக்ஷரங்களினது திரிபு என்பது ராயரவர்களுக்குச் சாத்தியமாவது எங்ஙனம்? எவ்விஷயத்தையும் சிலாலிகிதங் கொண்டே சாதித்தல் வேண்டுமென்பது ராயரவர்கள் அபிமதமாயின் தொல்காப்பியஞ் செல்லாலிகிதமாக.

தமிழிலக்கங்கள் தமிழுக்கே உரியவென்பதை இன்னும்வற்புறுத்துவாம். தமிழ் எண்ணுப் பெயர்ச்சொற்க ளெல்லாம் தமிழ்ச் சொற்களே யன்றிப் பிற பாஷைச் சொற்களல்ல. அதுபற்றியே அச்சொற்களெல்லாம் தொல்காப்பியத்தில் ஒவ்வொன்றாக வெடுத்து விதந்து இலக்கணங் கூறப்பட்டனவாம். தொல்காப்பியத்துள் விதந்தெடுத்துக் கூறப்பட்ட சொற்களுள் பிறபாஷை மொழி ஒன்றேனுமில்லாமையே போந்த சான்றாம். அவ்வெண்களுள்ளே ஒன்பது தொண்ணூறு தொளாயிரமென்பனவற்றின் பொருள்படப் பிற பாஷைகளில் அவ்வெண்களை விளக்கி வருஞ் சொற்கள் இல்லை யன்றோ. ஒன்பது என்பது ஒன்றொழிபத்து. தொண்ணூறு என்பது பத்தொழிநூறு. தொளாயிரமென்பது நூறொழி ஆயிரம். அவற்றுள் ஒன்பதன் குறியாகிய இலக்கம் வலப்பக்கத்தே ஒன்றன் குறியையுடைய பத்தின் குறியாகிய புள்ளியாமன்றோ. பத்தின் குறி பத்தை விளக்க வலப்பக்கத்தேயுள்ள ஒன்றன்குறி ஒன்றை யொழிக்க இரண்டுங்கூடி ஒன்றொழிபத்தென ஒன்பதன் குறியாய் நின்று அச்சொல்லை இனிது விளக்கல் பிரத்தியக்ஷமன்றோ. ஆதலின் அவ்விலக்கம் தமிழுக்கே உரியதென்பதற்கு வேறு சான்று வேண்டா.

ஒன்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பனவற்றின் பொருளுக்கு ஒத்துள்ளன, நம்மறிவுக் கெட்டிய வரையில், ரோமன் இலக்கங்கள் மாத்திரமேயாம். அவை IX., XC., CM., என்பன. அவை முறையே ஒன்றொழிபத்து, பத்தொழிநூறு, நூறொழி ஆயிரம் எனப்பொருள் தரும். ஆயினும் அவற்றை யுணர்த்துஞ் சொற்களுக்கோ அப்பொருளில்லை.

தமிழிலே ஒன்று முதலிய எண்களுக்கு மாத்திரமன்று கால், அரை, முக்கால், அரைக்கால், காணி, அரைக்காணி, பாகாணி, மா, இருமா, முந்திரி முதலிய கீழ்வாய் எண்களுக்கு மிலக்கமுளவன்றோ.

அக்கீழ்வாயெண்ணுப்பெயர்களுந் தமிழ்ச்சொற்களேயன்றே. அவை களை வடமொழியிற்றானும் இத்தனையி லொரு அமிசமென்று வழங் குவதன்றி தனித்தனிச் சொல்லாற் குறித்து வழங்குமாறில்லை. தமிழிலக்கங்கள் அசோகன் காலத்து எண்களின்றிரிபெனக் கூறும் ராயரவர்கள் தமிழ்க் கீழ்வாயிலக்கங்களுக்கும் அசோக இலக்கங் களையே மூலஸ்தான மாக்குவார்கள் போலும். தமிழ்க் கீழ்வாயிலக் கங்களுக்கிணையான இலக்கங்கள் இந்திய பாஷைகளுள் மற்றைப் பா ஷையிலும் இதர தேச பாஷைகளிலும் இல்லையன்றே. தமிழர் மேல்வாயிலக்கங்களைப் பிறபாஷைபாற் பிச்சையேற்றவராயின் கீழ் வாயிலக்கங்களையும் அப்பாஷையினிடத்தேயே ஏற்றாராகற் பாலர். அங்ஙனம் பிச்சையீந்த பாஷை ஒன்றின்மையான் மேல்வாயிலக்கங் களும் அக்கீழ்வாயிலக்கங்களைப் போலவே தமிழுக்கேயுரியவாதல் நன்கு துணியப்படும்.

தமிழிலக்கங்களும் கீழ்வாயெண்களும் தமிழுக்கேயுரியவென் பது அவை பண்டைத்தமிழ்ச்செய்யுட்கண்ணும் எடுத்தாளப்பட்டு வருதலானும் இனிது நாட்டப்படும். அச்செய்யுட்கள் வருமாறு:—

திருமூலர்.

"எட்டிரண்டு மினிதறிகின்றிலர்."

திருவாசகம்.

"எட்டினோ டிரண்டும் மறியேனையே"

ஔவையார்.

"எட்டேகால் லக்ஷணமே யேழைந்து மைப்பரியே"

காளமேகம்.

"எட்டொருமா வெண்காணி மீதே யிருந்ததலை
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே"

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
யிருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
யொருமாவின் கீழரையின் றோது"

இன்னும் தமிழுக்கிலக்கணஞ்செய்த தொல்லாசிரியர் தாமே எழுத்தை ஒலியெழுத்தென்றும் வரியெழுத்தென்றும் இருவகைப் படுத்தி வரியெழுத்திற்கும்,

"கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
யுட்கொளற் கிடுமுரு பாம்வரி யெழுத்தே"

என இலக்கணங்கூறிப் போந்தாரன்றோ. இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலே முறையாமாதலின் அவ்விலக்கணஞ்செய்யு முன்னரே தமிழ்எழுதப்பட்டு வந்ததென்பது மறுக்கொணுவுண்மையாம். அப்பண்டைக்காலத்தேதானே தமிழ் எழுத்துக்களுக்கு வரிவடிவமைத்துக்கொண்ட தமிழர், தமிழெண்களுக்கு இலக்கம் பிறர்பாற்பிச்சையேற்றாரென்பது திருமகள் இரந்துண்டாள் என்பதோடொக்கும்.

இனி ராயரவர்கள் தந்த படத்தின்மாட்டுஞ் சிறிதாராய்வாம். அப்படத்தைப் பலவீடுகளாக வகுத்து முதல்வீட்டை அசோக எண்களுக்காக்கி ஆங்கிருத்தியஎண்கள் ஒன்றும் ஆறுமேயாம். இவ்விரண்டுமே தமிழிலக்கங்கள் பத்துக்கும் வித்தாமென்பது ராயரவர்கள் கொள்கையாம். அவ்விரண்டுஞ் சர்வவல்லமையுடையனவோ அன்றி ஆணும்பெண்ணுமோ அன்றிச்சக்தியுஞ் சிவமுந்தாமோ அறிகிலம். அவற்றின் சரித்திரத்தைக் கூறப்புகுந்த ராயரவர்கள் அவ்விரண்டிலக்கங்கள் இவ்வியல்புடையன இன்னஇன்னகாலத் தின்ன இன்ன இலக்கங்களை ஈன்றனவெனக் கூறுதொழிந்தது சுருங்கக்கூறல் என்னும் வனப்புப்பற்றியேபோலும்.

இத்துணையுஞ்செய்த சங்கோத்தரங்களுக்கு ராயரவர்கள் எம்மை முனியார்களாக.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

# வானசாஸ்திரம்.

காப்பு வெண்பா.

சோதிமலி மண்டலச்சீர் துன்னியொளிர் சாத்திரத்தை
யோதுதமிழ் வாசகத்தா லோதுவிக்கும்—வேதவகை
செந்தமிழிற் பாடியவன் செஞ்சரணம்: மாதமொளிர்
'செந்தமி'ழ் னேங்குமது தேர்.

சூரியன் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் ஆகாயமண்டலத்தில் சோதிவடிவமாய் விளங்குகின்றன. இச்சோதிமயமான கிரகங்கள் முதலியவைகளைப்பற்றிக்கூறும் சாத்திரத்தை வடநெறியார் சோதிச்சாஸ்திரம் அல்லது சோதிடம் என்று வழங்கிவருகின்றார்கள். எனவே ஒளிவடிவமான கிரக நக்ஷத்திரங்களைப்பற்றிய சாஸ்திரம் சோதிடமெனப்படுகின்றது. இச்சாத்திரம் வேதாங்கங்களிலொன்றாய் வைதிகநெறியிலுள்ளார்க்கு இன்றியமையாததொன்றாகின்றது. இதில் சூரியனைப்பற்றிய மார்க்கத்தைச் சவுரமானமென்றும் சந்திரனைப்பற்றிய மார்க்கத்தைச் சாந்திரமானமென்றும் வழங்கிவருகின்றார்கள். சூரியனது மேடாதிலக்கினப் பிரவேசகாலத்தை மாதமெனக்கொளல் ஸவுரமான மாதம். சந்திரன் அமாவாசைக்கப்புரம் கலைகளை ஏற்கும் காலம்முதல் மாதமெனக்கொளல் சாந்திரமானம். வைதிகநெறியில் இரண்டுமார்க்கங்களும் நடைபெறினும் திதி நக்ஷத்திரங்களைப் பகுத்துணர நம்மவர்க்கு விசேஷமாய்ப் பிரத்திடக்ஷ ஏதுவாய் விளங்குவது சாந்திரமான நெறியேயாம். இராக்காலங்களில் நாம் நமதுகண்களால் நேரிற்பார்த்துணரலாம். ஸவுரமானவிதி இப்படிப் பகுத்துணரத்தக்கதன்று. யந்திரசாதனையின்றி முடியாது.

2. இச்சோதிட சாத்திரத்துள் மூன்று பிரிவுகள் உண்டு. ஸம்ஹிதையென்பது அவைகளுக்குப் பொதுப்பெயர். கிரகங்களின் கமனகமனங்களை விளக்குமதைத் தந்திரசாஸ்திரமென்று வழங்கிவருகின்றார்கள். இதற்குத்தான் வானசாஸ்திரமெனப்பெயர். மற்றொரு பிரிவிற்கு ஹொரா சாஸ்திர மெனப்பெயர். இப்பெயர் அகோராத்திர மெனும் தொடர்மொழியில் முதலிலும் கடையிலு

முள்ள எழுத்துக்களை நீக்கி நடுநின்ற ஹோரா வெனு மக்ஷரங்களைக் கொண்டு உண்டாக்கிய அபிதானமாகின்றது. இதுவும் ஓர்வகைப் பிரத்தியாகாரம் போலும். இராத்திரிப் பகல்களைப்பற்றிய சாத்திர மென்பதே இதன் பொருள். பகல் அல்லது இராவில் ஒரு குழந்தை பிறந்தால் அது முன் ஜன்மத்திற் செய்த புண்ணிய பாபங்களைப் பிறந்தது முதல் அனுபவிக்கவேண்டியதாகின்றதென்றும் அந்த நல்வினை தீவினைகளின் பலனைக்காட்டுவதுதான் ஹோராசாஸ்திர மென்றும் வராகமிகிரர் விளக்கியுள்ளார். மூன்றாவதுபாகத்திற்கு அங்கவிநிச்சய சாஸ்திரமெனப் பெயர். ஜாதகம் எழுதிக் கிரக நிலையைக் காட்டல் விவாகம் யாத்திரை முதலியவைகளுக்குக் கால நிர்ணயஞ் செய்தல் முதலியன மூன்றும் பாகத்தின் விஷயங்களாம்.

3. இவ் வானசாஸ்திரத்தில் முதல் நூல் செய்தவர் ஐவர். 1 புலிசர், 2 ரோமகர், 3 வஸிஷ்டர், 4 சூரியன், 5 பிதாமகன் என்பவர்களே. இந்நூல்கள் கூறும் விதிகளின்படி கிரகங்களின் கதிகளைக் கணக்கிடும்போது வித்தியாசங்கள் நேரிடில், கிரகச்சாயையையும் தண்ணீர் மட்டத்தையும் பார்த்துக்கொண்டு கருவிகளைக்கொண்டு அயனங்களின் முடிவுக்காலத்தையும் கிரகங்கள், பரிசோதிப்பவருக்கு நேர்கிழக்காகவா, அல்லது உச்சமாகவா, நிற்கின்றனவென்பதையும் பார்த்துக்கொண்டு அந்த வித்தியாசங்களை நீக்கிச் சரிபார்த்துக் கொள்ளலும் வேண்டும். ககோள சாஸ்திர மென்பது வான சாஸ்திரத்திற்கு மற்றொரு பெயர். ஆகாச மண்டல மென்பது அதன் பொருள். நாம் வாழு மிவ்வுலகத்தைப் படைக்கும் பிரமதேவனே இச்சாத்திரத்தைப் படைத்துள்ளானென்றால் இச்சாத்திரத்தின்பழமையை நாம் நிரூபித்தல் மிகையாம். சூரியனும் பிதாமகனைப் போற் பழமையானவனேயாம். மற்றைய மூவராம் வஸிஷ்டர், புலிசர், ரோமகர்களும் பண்டைக்காலத்து முனிவர்களேயாம். இதனால் ககோளமெனும் இந்த வானசாஸ்திரம் இந்துக்களின் புராதனமாய் நடைபெற்ற தென்பது நிர்விவாதமானதேயாம். இந்த ஐவர்களன்றி வேறு பிறரும் நூல்கள் செய்துள்ளார். அந்நூல்களாவன :—

க. சோம சித்தாந்தம்.
உ. வியாஸ சித்தாந்தம்.

௩. போஜ சித்தாந்தம்.
௪. வராக சித்தாந்தம்.
௫. சுந்தரர் சித்தாந்தம்.
௬. ஆரிய சித்தாந்தம்.
௭. சித்தாந்த சிரோமணி.

இவைகளுந் தலைமைபெற்ற நூல்களே. சித்தாந்த சிரோமணி பாஸ்கராசாரியார் செய்த நூல். செய்த காலம் கி. பி. 1150-ஆ (சாலிவாகன சகம் 1072.) சாலிவாகன சகம் 1036-ல் அவர் பிறந்துள்ளார். தமது 36-வது வயதில் இச்சிரோமணிநூலைச் செய்தனர்.

4. வான சாஸ்திர விஷயங்கள் புராணங்களிலும் காணப்படுகின்றன. ஜனங்கள் வழங்கி வந்த கருத்துக்களை நம்பிப் புராணஞ் செய்தோர் கூறியுள்ளாராதலின் அவர்கள் சொல்லும் பௌராணிகமதம் பிழையுள்ளதேயாம். ஏனெனில் அவர்கள் பூமி அசைவற்றிருக்கச் சூரியன் பூமியைச் சுற்றி ஓடலால் இராப்பகல்கள் உண்டாகின்றன என்பதும் சந்திரனைப் பார்க்கிலும் சூரியன் பூமிக்குச் சமீபத்திலிருக்கிறான் என்பதும் அவர்கள் கொள்கைகளாம். வான சாஸ்திர ஆராய்ச்சியும் காட்சிப் பிரமாண அனுபவமும் இல்லாமல் இக்கருத்துக்களுண்டாகி நடைபெறுவதாற் பிழையேயாம். இவை நமது நாட்டு வான சாஸ்திரிகளின் கொள்கைகளுக்கே மாறுபாடு உடையனவாம்.

5. வான சாஸ்திரம் வெகு பூர்வீக காலந்தொடங்கி இந்தியாவில் வழங்கி வருகின்றது. மேற்றிசைத் தேசங்களில் இச்சரித்திரம் கண்டுபிடிக்கப்படும் முன்பே இந்தியாவில் வழங்கி வந்தது. நம்மவர் சுயராஜரீகத்தை இழந்துவிட்டபடியாலும் பராக்கிரமபாண்டியின் காலத்தில் மகம்மதியரும் வேறு புறநாட்டார்களும் நமது நாட்டிற் படையெடுத்து ஏராளமான பொருள்களைக் கவர்ந்து சென்றதுமன்றிக் கலைஞானபுஸ்தகங்களையும் நிர்மூலமாக்கி விட்டபடியாலும் வானசாஸ்திர சம்பந்தமாயுள்ள நமது புராதன நூல்கள் அழிந்து போயின. ராஜரீகம் ஒழியவே அவ்வகை சாஸ்திர ஆராய்ச்சியும் விருத்தியும் உண்டாக வழியில்லாது அம்மார்க்கம் ஒய்ந்து நின்று

*

விட்டது. எகிப்து, கல்தேயா, சீன முதலிய நாட்டிலுள்ளார் முற்காலத்தில் அநேக மெய்ச்சம்பவங்களையும் காட்சிப்பிரமாண அறிவையும் கணித விதிகளையும் முறைகளையும் அறிந்திருந்தார்கள். அறுபது வருடச்சக்கரத்தைக் கிறிஸ்து பிறக்க 2900-ஆண்டுகளுக்கு நெடுநாளைக்கு முன்பே சீனர்கள் ஏற்படுத்தியுள்ளார். இஃதன்றி அவர்கள் கி. மு. 2128-ஆண்டுகளில் கல்தேயர் 19-ஆண்டு சக்கரத்தைக் கொண்டு ஏற்படுத்தும் கிரகணங்களைக் கணிக்கும் விதத்திலும் வல்லவராயிருந்தார்கள்.

6. சித்தாந்த சிரோமணியில் பாஸ்கராசாரியார் சந்திரனும் புதனும் சுக்கிரனும் சூரியனும் செவ்வாயும் வியாழனும் சனியும் பூமியைச் சுற்றி ஓடுகின்றன வென்று சொல்லியிருப்பதால் கிரக வரிசையின்படி சந்திரனே கிட்ட இருக்கின்றானென்பது விளங்குகின்றது. பூமி சூரியன்களின் இடம்மட்டும் மாறியிருக்கின்றதேயன்றி மற்றைக்கிரகங்களின் நிலை ஐரோப்பியர்களின் சாஸ்திரத்தோடுசரியாகவே இருக்கின்றது. ஐரோப்பியர் சாஸ்திரப்படி சூரியனைச் சுற்றிப் பூமியோடுங்காலம் 365 நாள்களும் 5 மணியும் 48 நிமிஷமும் 48 நொடியுமாகிய ஒரு வருஷகாலமென்று சொல்லப்படுகின்றது. நமது சாஸ்திரத்தின்படி சூரியன் 12 இராசிகளிலும் செல்லும் காலம் 365 நாள்களும் 6 மணியும் 12 நிமிஷமும் 29 நொடியுமாகிய ஒரு வருஷகாலமெனப்படுகின்றது. நியாய சோதனைவகை வெவ்வேறாயினும் வருஷமெனுங் காலக்கணக்கை இருதிறத்தாரும் சற்றேறக்குறையச் சரியாகவே கணிதம் செய்துள்ளார். வித்தியாசமோ 24 நிமிஷங்களே யாம்.

7. கிரேக்க தேசத்துக் கலாநிபுணர்களான பைதாகொரஸ், பிளேற்றோ,முதலியோர் பூமி கோளவடிவுள்ளதாய்,த்தனது நாராசத்தில் நாள்வீதச் சுற்றுள்ள தென்றும் சூரியனைச் சுற்றி வருஷாந்திரச் சுற்றோட்டமுடைய தென்றும் சந்திரக்கிரகணம் பூமிச் சாயையாலுண்டாகின்ற தென்றும் எண்ணிய கொள்கையார். இவர்களிற் சிலர் பூமி கோளவடிவமுள்ளதாயினும் யாதோரசைவுமின்றிப் பிரமாண்டத்தில் நிலையாய் நிற்கின்ற தெனவும் வேறு சிலர் பூமி தட்டை வடிவெனவுஞ் சாதித்தனர். பைதாகொரஸ் என்பவரின் கோட்

பாடு கட்புலக்காட்சிக்குமாறுகொண்டிருப்பதால் எகிப்தியகலாவல் லவராம் "தொலிமி" என்பவர் அதை நிராகரித்துப் பூமி அண்டத் தின் நடுவே இருக்கின்றதென்றும் சூரியன் முதலிய வானச்சோதி கள் அதைச் சுற்றி ஓடுகின்றனவென்றும் நிரூபித்தனர். இதைப் புருஷிய தேயத்து கொப்பணிகஸ் என்பவர் சுமார் 1400-வதில் மாற்றிக் கூறினர். அவர் 30-வருஷகாலம் மகாஜாக்கிரதையாய் வான சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்து மண்டல வரிசையை யதார்த்தமாய்க் கண்டு பிடித்தாராம். பிரமாண்டத்தின் நடுவிலே சூரியன் நிற்கப் பூமி யதைச்சுற்றி யோடுகின்றதெனவும் பூமி தனது நாராசத்திற் சுழல்வதால் இராப்பகலுண்டாகின்றவெனவும் நிச்சயித்தார். இது வே யதார்த்த சாஸ்திரமென அங்கிலேயரும் மற்றைய ஐரோப்பிய ரும் அங்கீகரித்திருக்கிறார்கள். இராகு கேதுக்கள் சாயாக்கிரகங் கள். மற்றைய ஏழு கிரகங்களும் சூரியன் முதல் சனி வரையிலு முள்ளவைகளே யாம். இவைகளே வாரத்தின் ஏழு நாளுக்குரிய கிரகங்கள். எந்நாட்டிலும் இந்த வாரக் கணக்கு நடைபெறுவதால் ஆதியில் உலகம் படைக்கப்பட்ட காலம் தொடங்கி மனிதர்கள் எத் தேசத்திலும் சோதிமண்டலங்களையே தெய்வமென வணங்கி வழி பட்டு வந்தனரெனத் தோற்றுகின்றது. கிரகங்களின் ஓட்டத்தை யும் அவைகளின் அயனாகாரத்தையும் ஐரோப்பியவானசாஸ்திரி கள் நிதானித்தறிந்தும் கிரகங்களை இயக்கும் காரணமும் சத்தும் என்னவென்பதை அக்காலத்திலறிய வில்லையென்றும் அக்காரண சத்துக்களை ஸ்ரீ. "ஐஸாக்கு நியூற்றன்" என்பவர் முதலிற் கண்டு பிடித்தாரென்றும் கூறுவது ஐரோப்பியர்களின் துணிபு.

8. கிரகங்களின் ஓட்டத்திற்கு மூலாதாரகாரணம்திண்மைக்க வர்ச்சியேயாம். ஐஸாக்குநியூற்றன் பிறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இதனை நம்மவர் அறிந்துள்ளா ரென்பதற்குச் சித்தாந்த சிரோமணியேஆதாரம். "பூமிக்குதிண்மைக்கவர்ச்சி சகஜமாயுள்ளது. இக்கவர்ச்சியால் அந்தரத்திலுள்ள வஸ்துக்களைப் பூமி தன்வசமிழுக் கின்றது. வஸ்துக்கள் விழுவதாய்த் தோற்றுவது பூமியாலிழுக்கப் படுந் தன்மையையே. ஆகாயம் எங்கும் விரிந்திருக்கையில் பூமிவிழுவ தெங்ஙனம்?" இது 3-ம் அத்தியாம் 6-ம் சுலோகத்தின் கருத்து.

9. இத்தகைய சிறப்புவாய்ந்த வானசாஸ்திரத்தின் மகிமையை நம்மவர் பார்த்துக் களிப்பது இகபரசுகத்திற்குக் காரணமாம். மாசில்லாத இரவில் சந்திரன் பூரணகலைகளுடன் உதித்து விளங்குகையில் நட்சத்திரசோதியையும் ஆகாயமண்டலத்தின் காட்சி மகிமையையும் பார்த்துக் களிக்காத மானிடர்கள் யாருமில்லை. கம்பன், காளிதாசன் முதலிய கவிகளின் சந்திரசூரியோதய வருணனைகளைக் கேட்டுக் களிப்பவர்களுக்கு அவ்வானச் சோதிகள் உதயாத்தமன காலத்தில் விளங்கும் தோற்றம் ஆன்மஞானிகளையும் மயக்கு மென்றால் உலகிலுள்ள சாதாரண மனிதர்கள் கண்டு தினந்தோறுங் களிப்பதைக் கூறலும் வேண்டுமோ! தெய்வவல்லமைகள் அப்போது மனதை உருக்கும். இக்காலத்து நம்மையாளும் அங்கிலேயர்கள் இச்சரித்திரத்தை நன்காராய்ந்து தக்க கருவிகளைக் கொண்டு பரிசோதித்து விருத்தி செய்திருக்கின்றார்கள். ஆராய்ச்சிவகையாலவர்கள் கண்டுணர்ந்த உண்மைகளைக் காலநிலைகருதி நம்பவர்கள் பார்த்துக் களிக்க இச்சரித்திர சம்பந்தமான விஷயங்களை இனி மாதந்தோறும் மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாக நம்மால் எழுதி வெளியிடப்படும். இங்ஙனம்,

தி. வேங்கடராம ஐயங்கார்,
தலைமைத் தமிழ் பண்டிதர்.
சேன் தோம் காலேஜ், சென்னை.

---

# திருவெள்ளறைச்சாஸநங்கள்.

திருவெள்ளறைக்கிராமம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 8 மைலில் இருக்கிறது. இது, ஆழ்வார்களிற், பெரியாழ்வார் திருமங்கையார் இவ்விருவராற் பாடப்பெற்ற விஷ்ணு க்ஷேத்திரம். பூர்வசிகைப் பிராமணர்களுக்குப் பிரதான இருப்பிடம். இவ்வினத்தாருட் பலர் இராமானுஜாசாரியர்காலத்து வெகுபிரபல வித்துவான்களாயிருந்ததோடுங்கூட, விசிஷ்டாத்துவைத மதத்துப்பூர்வாசாரியர்களுமானார்கள். இப்பொழுது இவ்வூர்வித்தைவிஷயத்தில் அவ்வளவு

சிறப்புற்றதாயில்லை. இச்சிறு கிராமம் காடுகளின் இடைகளிற் கட்டப்பட்டிருப்பதைக் காணின், இவ்வாறே இருக்கும் பலஜைன க்ஷேத்திரங்களின் ஞாபகம்வராதிராது. இவ்விடத்தில், ஒரு பிரபல விஷ்ணு கோயிலும், அசிரத்தையாய்க்கிடக்கும் ஒரு சிவாலயமும், இதற்குத் தெற்கில் இடிந்துபாழாய்க்கிடக்கும் மற்றொரு கோயிலும் இருக்கின்றன. இவற்றுள், விஷ்ணுகோயிற்பெருமாளுக்கு புண்டரீகாக்ஷர் அல்லது செந்தாமரைக்கண்ணரென்றும், நாச்சியாருக்குப்பங்கயச்செல்வியென்றும் பெயர். இக்கோயில் ஒரு சிறு பாறையின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. இப்பாறையில், புண்டரீகாக்ஷர் கோயிலினடியில், ஒரு பெரிய குடைவரைக்கோயிலொன்றிருக்கிறது. அதில் சுவாமிகள் ஒன்றும் இல்லை. ஆகையால் பூஜையுமில்லை. இக்குடைவரையைக்குறித்து:— "கல்லறைமேல் வெள்ளறையாய்" என்று திருமங்கையார் புண்டரீகாக்ஷர் கோயிலைப் புகழ்ந்திருப்பதும் காண்க. காஞ்சிபுரத்து அருளாளப்பெருமாள் கோயிலின் கர்ப்பக்கிரஹத்துக்கு ஒரு பிரதியென்னலாம்படியாயிருக்கிறது, திருவெள்ளறை விஷ்ணு கோயிற் கர்ப்பக்கிரகம். அவ்விடத்தைப்போலவே இவ்விடத்திலும் ஒரு 'மலை' மேற் கோயில்கட்டப்பட்டிருக்கிறது. அவ்விடத்து மலைக்கு அஸ்திகிரியென்று பெயர் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே; இவ்விடத்துமலைக்கு 'ஸ்வேதாத்திரி' என்று பெயர். இதில் மூன்றுபிராகாரமிருக்கின்றன. முதலிரண்டின்சுவர்களின்மேற் பல கல்வெட்டுக்களுள. இவைகளில் அநேகம் வேண்டுமென்றே பொத்தி அழிக்கப்பட்டிருக்கின்றன; ஆகையால் வாசிக்கக்கூடாமலிருக்கின்றன. இவைகளைத்தவிர்ந்துள்ள சில படிக்கக்கூடிய சாஸநங்கள் அவ்வளவு புராதனமானவைகளல்ல. கீழ்க்கல்லறையிலிருக்குந்தூண்களிற் சில, ராஜகேசரிவர்மனுடையவும் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மனுடையவும் சாஸநங்களாம்; இவைவெகுவாய்அழிந்துகிடக்கின்றன. இங்குமங்குஞ் சிலஎழுத்துக்கள் காணப்படுகின்றனவேயொழிய சாஸனம் முழுவதும் வாசிக்கமுடியாமலழிந்துபோயின.

இவ்விரண்டு கோயில்களைப்பார்க்கிலும், சாஸனபரீக்ஷகர்களுக்கு முக்கியமானது சிவன் கோயிலே. இதில் அநேக புராதன சாஸனங்களிருப்பதுந்தவிர இவையெல்லாம் வெகு நல்லநிலையிற் கெடா

மலிருக்கின்றன. இவைகளிற் பதினறு சாஸனங்கள் அடியிற் பதிப்பிக்கின்றோம்.

மேற்கூறிய சிவன்கோயிற்குத் தெற்கில் ஒரு பாழ்ங்கோயிலிருக்கிறது என்று முன்னமே சொன்னோம். அதன் சுவரிலும் சில சாஸனங்களிருக்கின்றன. இக்கோயிலைச்சுற்றி நாகதாளி காடாய்முளைத்திருப்பதால் பரீக்ஷிக்கக்கூடவில்லை. சாஸந பரீக்ஷக உத்தியோகஸ்தர்கள் இவ்விடங்கட்குப்போய்ச் சாஸநங்களை ஆராயவில்லை. சிவன் கோயில் ஒன்றிவ்விடமுண்டென்பதும், அதிற் புராதன சாஸனங்களிருக்கின்றனவென்பதும் இவர்களுக்கு இனிமேற்றான் தெரியவேண்டுவதுபோலக்காணப்படுகிறது. இக்கோயிலுக்கு இதன் சாஸநங்களால் 'திருவானைக்கல்' என்று பெயரிருந்ததாக விளங்குகிறது. இப்பெயரையொட்டி இப்பொழுது இதிலிருக்கும் ஈசுவரனுக்கு ஜம்புநாதனென்றும், கோயிலுக்கு ஜம்புகேசுவரமென்றும் பெயர்வழங்குகின்றன, (திருவானைக்காவென்பதைப்போல).

இச்சாஸநங்களிற் கூறியிருக்கும் மதுரைகொண்ட கோப்பரகேசரியென்னுமரசன் திருவிசைப்பாவில்,

"வெங்கோல் வேந்தன் றென்னாடு மீழங்கொண்ட திறற்
செங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
வங்கோல் வளையார் பாடியாடு மணிதில்லை யம்பலத்து
ளெங்கோ னீச னெம்மிறையை யென்றுகொ லெய்துவதே."

என்று கண்டராதித்தராற் புகழப்பட்டவனும்,

"ஈழமுந்தமிழ்க்கூடலுஞ்சிதைத் திகல்கடந்தோரிசைபரந்ததும்"

என்று கலிங்கத்துப்பரணியிற் பாடப்பெற்றோனுமேயாவன். இவனையே சாஸநங்களிற் பலகாலும் "மதிரையும் ஈழமும் வீரபாண்டியன் முடித்தலையும் கொண்டருளியே கோப்பரகேசரி" யென்றுகூறியிருத்தல் காணலாம். (1)

பத்தாவது சாஸநம் ஒரு பல்லவ சாஸநம். இச்சந்ததியரசர்கள் பாரத்துவாஜகோத்திரத்தாரென்று சொல்லிக்கொள்ளுவதைத்

---

(1) சோழவம்சசரித்திரம் சீக்கிரமே என்னண்பர் ஒருவரால் தமிழில் வெளிவரும். அதில் இவ்வரசர்கள்விஷயமாய்ப் பார்க்கக்காணலாம்.

"தென்னிந்தியா சாஸனங்கள்" என்னும் பத்திரத்தில் சொல்லியிருக்கிறது. இரண்டாவது வரியால் இதிற் கூறியிருக்கும் அரசன் பல்லவ வம்சத்தான் என்றுதெரிகிறது. இவ்வரசன் தந்திவர்ம்மனோ நந்திவர்ம்மனோ சொல்லமுடியவில்லை. இச்சாஸனத்தினிடப்பாதி, அம்மன்கோயில் அஸ்திவாரம்போட உத்தேசித்து வெட்டித்தள்ளிவிடப்பட்டிருப்பதால் கெட்டுவிட்டது.

இச்சாஸங்களிற் சிற்சில எழுத்து வேறுபாடுகளுள. அவற்றில் முக்கியமானது றை. இவ்வெழுத்து இரண்டு கொம்புகளுள்ள குறியையடையாமல், னை, ளை, லை, ணை—களிற் போன்ற குறியையுடைத்தாயிருக்கிறது.

சில வார்த்தைகளும் கவனிக்கத்தக்கவையே. "காத்தியாயினன்" என்னும் வடமொழி இச்சாஸநத்துள்ளொன்றில் "காச்சாணன்" என்றும், மற்றொன்றில் "காஸிபன்" என்பது "காச்சுவன்" என்றும் வந்திருக்கின்றன. அச்சாசனங்களாவன :—

## (i)

## திருவெள்ளறை அகிலாண்டநாயகி கோவிலுக்குத் தெற்கில் ஓர்கல்லின்மேற் காணப்படும் சாசனம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகோண்ட கோப்பரகேசரிப—
2 ன்மற்கியாண்டு பதிந்ஜந்தா [வ]-து இவ்—
3 வாண்டு திருவெள்ள [றை] திருவா [னை]க்கல்மா—
4 யிட்டியாயின நக்கன் மல்லன்
5 திருவானைக்கல் பெருமானடி—
6 களுக்கு திருநொந்த [ா] விளக்கு
7 இரவும் பகலும் எரிப்பதற்—
8 கு வைத்த பொன் முப்பதி[ன்] கழ—
9 ஞ்சு சந்திராதித [வல்] பன்மூலப
10 மூலபருடையாரமெக்ஷ

(இன்னும்வரும்.)

ச, ம. நடேசசாஸ்திரி.

ஸ்ரீ:

# ஆ ரா ய் ச் சி.

## கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்.

குலோத்துங்கன்கோவை ஒட்டக்கூத்தராற் பாடப்பட்ட தென்பது பலருங்கொண்ட கருத்தாகும். இவ்வாராய்ச்சிக்கு முன்னெல்லாம் யானும் அவ்வாறே கருதியதுண்டு. அங்ஙனங் கருதியதற்குக் காரணம் இக்கோவைப்பாட்டுப் பெற்றவனும் கூத்தர்பாடிய மூன்றுலாக்களுள் ஒன்று பெற்றவனும் குலோத்துங்கன் என்னும் பெயரேகொண்டிருத்தலும், "கோவையுலாவந்தாதிக்கோட்டக்கூத்தன்" என வழங்குதற்குப் பொருந்தக்காட்டுதற்குக் கூத்தர் பாடிய கோவை வேறறியப்படாமையுமேயாகும். சங்கரசோழனுலா என்னும் பழையநூற்கண்,

"கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றானுந்—தெள்ளித்தன்
முன்னாயகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னாயிரஞ் சொரிந்த பூபதியு—மென்னுமிவர்."

எனவருதலாற் கூத்தரால் உலாப்பாடப்பட்டவர் விக்கிரம சோழன் முதலாக மூவர் என்பதும் அவருள் விக்கிரமற்குப்பின்னாண்ட சோழன் அக்கூத்தர்பாற் பிள்ளைத்தமிழ் மாலையும் பெற்றான் என்பதும் அறியப்பட்டன. கூத்தர் பாடிய மூன்றுலாவும் விக்கிரமசோழதேவருலா, குலோத்துங்கசோழ தேவருலா, இராசராசசோழதேவருலா எனப் பெயர்பெற்றுலாவும். விக்கிரமசோழ தேவருலாவின்கண்,

"மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்
தோன்றிய சோன் விக்கிரமசோழன்"

எனவருதலான் விக்கிரமன் என்பான் அபயற்கு மகன் என்பது அறியலாகும். குலோத்துங்கசோழதேவருலாவில்,

"தவிராத சுங்கந் தவிர்த்தோன்—கவிராசர்
போற்றும் பெரியோ ரிவர்பின்பு பூதலங்க
ளாற்றுந் திருத்தோ ளகளங்கன்—வேற்றோர்
விரும்பாணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பாணி கொண்ட பெருமாள்—தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்கசோழன்"

எனவருதலாற் குலோத்துங்கசோழன் சுங்கந்தவிர்த்த சோழனாகிய அபயனுக்குமகனாகிய விக்கிரமனுக்குமகனாவன் என்று துணியலாகும். இதன்கண் விக்கிரமனைப் பரணிகொண்டபெருமாள் எனவும் அகளங்கன் எனவும் கூறினர். தந்தை சிறப்பை மகனுக்கேற்றிப் பரணிகொண்டபெருமாள் என விக்கிரமனையே புகழ்ந்ததாம். இதனை விக்கிரமசோழ தேவருலாவில்,

" ........................போர்த்தொழிலா
லேனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"

எனக் கலிங்கம்வென்ற சிறப்பை இவ்விக்கிரமனுக்கே யேற்றிக் கூறியதுபோலக் கொள்க. சோழர் குலமுதல்வனான சூரியன் களங்கமிலனாதல்பற்றி அக்குலத்துச் சோழர்க்கெல்லாம் அகளங்கன் என்பது பொதுவாக வழங்கப்படும். இப்பெயர் வழக்கம் விக்கிரமனைப்பற்றிய பாடல்களில் அதிகமாகக்காணப்படும். சுங்கந்தவிர்த்தவன் அபயனே என்பது "மறக்கலியுஞ்சுங்கமுமாற்றி" என்பதனால் நன்கறியப்பட்டதாகும். கலிங்கப்பெரும்பரணி கொண்டவன் சுங்கந்தவிர்த்த அபயனேயானாலும் ஈண்டுப் 'பெரும்பரணி கொண்ட பெருமாள்' என்றது அவ்வபயன் மகனையேயா மென்பது 'கவிராசர் போற்றும் சுங்கந்தவிர்த்தோன் இறுதியாகக்கூறப்பட்ட பெரியோர், இவர் பின்பு பரணிகொண்ட பெருமாள்' எனக்கூறியவாற்றானே தெளியப்படும். இராசராசசோழதேவருலாவின்கண்,

"கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
யுலகைமுன் காத்த வரவோன்—பலவுந்
தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி—முரணில்

புரந்தர னேமி பொருவு மகில
துரந்தரன் விக்கிரம சோழன்—பரந்தபனென்
றுளய் பெயர்கொண் டகிலாண்ட மும்புரந்த
சேளய் பெரிய திருக்குலத்து—நாயகன்
சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய
மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னிற் கடல்களின் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராசராசன்''

எனவருதலான் இராசராசன் என்பான் சுங்கந்தவிர்த்த அபயன் மகனுனவிக்கிரமன் மகனும், சிற்றம்பலம் பேரம்பலம் காமக்கோட் டமுதலிய பெரிய திருப்பணியெல்லாம் இயற்றியோனு மாகிய குலோத்துங்கனுக்குத் திருமகன் ஆவன் என்பது தெளியப்படும். சிற்றம்பலமுதலிய பெரும்பணியெல்லாம் சிறக்க இயற்று வித் தோன் குலோத்துங்கனே யென்பதும் அவனியற்றுவித்த அப்பணி கள் இன்ன என்பதும்,

''தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத
போதைத் திமிரப் பொறைநீக்கி—மாதரி
லோக்க வபிடேகஞ் செய்யு முரியைக்கட்
டக்க நிலைமைத் தனித்தேவி—மிக்க
புவனி முழுதுடைய பொற்றொடியுந் தானு
மவனி சுரர்சுருதி யார்ப்ப—நவநிதிதோய்ந்
தேத்தற் கருங்கடவு ளேல்லையி லானந்தக்
கூத்தைக் களிகூரக் கும்பிட்டுப்—போற்றினமேற்
றில்லைத் திருமன்றின் மூன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து—மல்லற்
றசும்பு வராகனிற் றண்பெரு நாவ
லசும்பு பசும்பொன் னடுக்கி—விசும்போ
ரலகை யிகந்த வகலகுல வச்ரப்
பலகை ததும்பப் பதித்து—மலர்கவிகை

காக்குங் கடலேழின் முத்தும் வரகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி—நோக்குந்
தொடுக்குஞ் சிரச்சேடன் சூளா மணிகொண்
டெடுக்குந் திருத்தீப மேற்றி—யடுக்கிய
தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மரதகத்தாற் பாசடையாய்ப்—போய
பருமுத்தா லாலியாய்ப் பத்மரா கத்தாற்
றிருமிக்க செந்தா மரையாய்ப்—பெருவர்க்க
நீலத்தால் வண்டி னிரையா யுரையிகந்த
கோலத்தாற் கோயிற் பணிகுயிற்றிச்—சூலத்தா
னூடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுரமு
மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடிப்
பொலங்கோட் டொருமேருப் பூதரமும் போல
வலங்கோட் டிகிரியு மானத்—தலங்கொ
ணிலையேழ கோபுரமும் விண்மே னெருங்கு
மலையேழு மென்ன வகுத்துத்—தலையின்
மகரங்கொள் கோபுரமு மானவி மானச்
சிகரங்க ளாகித் திகழ—நிகரி
லெரிபொற் படர்பாறை யென்னலா யெங்கும்
விரிபொற் றிருமுற்ற மின்னச்—சொரிபொற்
கடாரம்பன் னீர கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப—விடாதுநின்
றற்பக லாக வனந்த சதகோடி
கற்பக சாதி கதிர்த்துவரப்—பொற்பூண்
வாமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்து
சுரர்மகளி ராகத் துவள—வொருதான்
பிறக்கு மிமையப் பெருங்கடவுள் வெற்பை
மறைக்கும் படிசெல்வ மல்கச்—சிறக்கும்
இருக்காதி யெம்மறையு மெவ்வுலகு மீன்றாள்
திருக்காமக் கோட்டந் திகழ்த்தி—வருக்கப்
புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
மனையா வொருதேர் வகுத்து—முனைவன்
றிருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பெருக்கி—வருநாளில்"

எனக் குலோத்துங்கசோழ தேவருலாவின்கண் விரித்துரைத்தவாற்ருல் அறிந்துகொள்க. இதனையே கூத்தர் தக்கயாகப்பரணிக்கண்,

'கூட மெடுத்த குளத்தொடு கோபுர
மாட மெடுத்த பிரான்மகன் வாழியே'

'கோயின்முன் னேழ்நிலை கொண்டதோர் கோபுர
வாயில் வகுத்த பிரான்மகன் வாழியே'

'எண்டரு திக்கினிற் றில்லையி னேர்பெறு
மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே.'

என எடுத்துக்கூறியுள்ளாரென்பதும் உணரப்படும். கோயில் முன் ஏழ்நிலைக்கோபுரம் வகுத்த பிரான் மகன் என இதன்கண் வருதலானே கூத்தர் தக்கயாகப்பரணி பாடிய காலத்தவன் இராசராசன் என்பதும் தெளியலாகும். "நிலையேழு கோபுரமும் விண்மே னெருங்கு, மலையேழு மென்ன வகுத்து" எனக் குலோத்துங்கசோழதேவருலாக்கண் வந்தவாற்ருனே இதனைத் தெளிக.

இத்துணையுங்கூறியவாற்ருற் கூத்தராற் பாடப்பட்ட குலோத்துங்கன் சுங்கந்தவிர்த்த அபயன் பேரனும் விக்கிரமன் மகனும் இராசராசன் றந்தையும் ஆவன் என்பதும், அவனே சிற்றம்பலம் காமக்கோட்ட முதலிய கோயிற் பெரும்பணியெல்லாம் இயற்றுவித்தோன் என்பதும் கூத்தர்பாற் பிள்ளைத்தமிழும் உலாமாலையும் பெற்றனன் என்பதும் அறியலாகும்.

இனிக் குலோத்துங்கன் கோவைக்கட் கூறப்பட்ட குலோத்துங்கன் இன்னவன் என ஆராயுமிடத்து அக்கோவை நூற்கண்ணே,

[உ. துறை - ஐயம்]

சங்கமராச குலோத்துங்கசோழன் றமிழுறந்தைத்
துங்கன் வழிமுத லோனிட மோவவன் சூழிடமோ
வங்கவ னுக்கிரு ணீங்கிட மோவன்றி நண்பிடமோ
கொங்கவி ழுங்குழ லாட்கிட மேதெனக் கூறுவமே.

[சுந. துறை - கலவியின்மகிழ்தல்]

தேனர் கடலுந் திருப்பாற் கடலுந் திரைபுரண்டொன்
றனலெத் தன்மையத் தன்மைய தாமகி லாண்டமெலாங்
கோனுதந் சங்கரன்முன்னேன் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மானும் யானு மணந்தவிப் பேரின்ப மாக்கடலே.

[கூ அ. துறை - முயங்கல்]

தேனுந் துவர்க்கும் பசுங்பாகுங் கைக்குமத் தீங்கரும்பு
தானும் புளிக்குங் கனிகளுங் காருந் தசைமுகன் முற்
கூனுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லீனுந் தளிர்நிறத் தாளிதழ்த் தேனுண்ட வென்னிதழ்க்கே.

எனவருதலான் அவன் சங்கமராசசோழன் மகன் எனவும் சங்கரசோழன் அண்ணன் எனவும் குமாரகுலோத்துங்கன் எனப் பெயர்பெற்றவன் எனவும் தெளியலாகும். சங்கரன் என்பான் சங்கரசோழனுலாப் பாட்டுடைத்தலைவன். அவ்வுலாவிலே—

"சங்கமன் றொல்லைத் தவம்போல......
வல்லமனுதி மனுவினு மேதக்க
நல்லம னென்கின்ற நாயகற்கும்......
பைத்த பொருபுலியை பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கு—மெய்த்துணையாத்
தோற்றிய சங்கர ராசன் சுராசன்"

எனவருதலாற் சங்கமன் என்பானுக்கு நல்லமன் குமாரமகீதரன் சங்கரன் என மூவரும் புதல்வராவர் என்பது தெளியப்படுதலின் கோவைக்கட் குமாரகுலோத்துங்கன்எனப்பட்டானும்சங்கரசோழனுலாவிற் குமாரமகீதரன் எனப்பட்டானும் ஒருவனே யென்று நன்கு துணியப்படும். 'சங்கரன்சடையன்' 'ஆதித்தன் கம்பன்' என்றாற்போலச் சங்கமராசன் மகனை குலோத்துங்கனைச் சங்கமராச குலோத்துங்கன் என வழங்கினரெனத் தெரிந்துகொள்க. இவற்றாற் கூத்தருலாப்பெற்ற குலோத்துங்கனும் கோவைப்பாட்டுடைத் தலைவனை குலோத்துங்கனும் வேறு வேறாதல் நன்குதெளிக. சங்கரசோழனுலாவுடையார்,

"முன்னா யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னுயிரஞ்சொரிந்த பூபதியு—மென்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகாசல
பூசக்ர மேழும் புரந்ததற்பின்........
சங்கமன் றொல்லைத் தவம்போல"

என கூத்தர் பாடிய மூன்றுலாப்பெற்ற இராசராசன் முதலாகிய பலர்க்குப் பின்னே சங்கமராசனைக்கூறி அவனுக்குப்புதல்

வர்கள் குமாரகுலோத்துங்கன் முதலியோர் என்று தெளிவித்தலாற் கோவைப் பாட்டுடைத்தலைவனான குமார குலோத்துங்கன் கூத்தரு லாப்பெற்ற குலோத்துங்கனுக்கு மிகவும் பிற்பட்டவனாவனென் பது உணரப்படும். கூத்தர் விக்கிரமன் காலத்தவர்; அவ்விக்கிரமன் பேரனான இராசராசன் காலத்துக்குப் பிற்பட்டுமிருந்தாரென்றல் சிறிதும் பொருந்தாதாதலின் இராசராசன்காலத்துக்கு மிகப்பிற் பட்டிருந்த சங்கரராசன் மகனான குமாரகுலோத்துங்கனை அவர் கோவையாற் பாடினரெனக் கொள்ளுதலும் இயையாமை காணப் படும். மற்றுக் "கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" எனக் கூத்தரைக்கோவையாற் சிறப்பித்தலுண்டேயெனின், அஃது அவர் புதுவைக்காங்கேயன் மேற்பாடிய *நாலாயிரக்கோவை பற்றியாமெ ன வுணர்க. இது 'சோலாகல மன்னரில்' என்னுஞ் சோழமண்டல சதகச்செய்யுளானும் அதன் மேற்கோள்களானும் நன்குணரப்பட் டது.

இனி இக்குலோத்துங்கன்கோவைக்கட் பலவிடத்தும் குமார குலோத்துங்கன் எனக்கூறுதலானும் சங்கர சோழனுலாவிற் குமார மகீதரன் எனவே வழங்குதலானும் இவனது கோவைப்பாட்டை "குமாரகுலோத்துங்கன் கோவை" என ஆளுதலே இயைபுடைத் தாமெனத் தோற்றுகின்றது. இக்கோவைக் காலமுஞ் சங்கரசோழ னுலாக்காலமும் ஒன்றேயாமென்பது அவ்விரு நூற்றலைவரும் உடன் பிறந்தவராதல் பற்றிக் கொள்ளப்படும். இவ்வாராய்ச்சியாற் கூத் தருக்கும் குலோத்துங்கன்கோவைக்கும் யாதோரியையும் இன்மை தேறப்படும்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

---

* "செந்தமிழ்"த் தொகுதி-௩, பகுதி-௧, பக்கம்-௪, ௬, ௨௭.